Reg. No. M. 1725.

செந்தமிழ்ச்செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ௨	துரோதன கார்த்திகை மீ	பரல் கக

உள்ளுறை

இறையனா ரகப்பொருள்	சகரு
நம்பியாண்டார் நம்பிகள்	சஎம
அகம் புறம்	சஎரு
சிவகசிந்தாமணி	சஎஅ
செந்தமிழ்ச் செல்வி வழிபாடு	சஅரு
உமாபதிசிவாசாரியர்புராணம்	சஅஅ
தமிழ்த் தோற்றத் தேற்றம்	சகூஉ
இன்னுரை	சகூச
கடிதப் பாசுரம்	சகூரு
அறிவுதயம்	சகூகூ
தமிழ்நீதி	இளக

The South India Saiva Siddhanta Works
Publishing Society, Tinnevelly, Ltd.

ஆண்டு கையொப்பம் ரு 3. தனிப்பரல் அணா 6

All Rights Reserved

'செந்தமிழ்ச் செல்வி' இதழாசிரியர்

கூட்டத்து உறுப்பினர்கள்

(Editorial Board Members)

தலைவர் :

1 திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் M.A., M.L.,
அட்வகேட், நியாய கலாசாலைப் பேராசிரியர், சென்னை.

---

2. ,, ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள், B.A. L.T.,
பாடசாலை டெப்டி இன்ஸ்பெக்டர்,
சைதாப்பேட்டை பிரிவு.

3. ,, ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர், ஹீபர் கலாசாலை,
திருச்சிராப்பள்ளி.

4. ,, துடிசைக்கிழார் அ. சிதம்பரனாரவர்கள்,
போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், ஓமலூர்,
சேலம்.

5 ,, M. V. நெல்லையப்ப பிள்ளையவர்கள், B.A.,
பென்ஷன் தாசில்தார், சிந்துபூந்துறை.

6 ,, வித்வான் மு. கதிரேசச் செட்டியாரவர்கள்,
மகிபாலன்பட்டி.

7. ,, T. S. கந்தசாமி முதலியாரவர்கள், B. A ,
வக்கீல், சாத்தூர்.

8. ,, ஆ. கார்மேகக் கோனாரவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

கையொப்ப விளம்பரம்

		ரூ.	அ.
இந்தியா, இலங்கை, பர்மா முதலிய உள்நாடுகளுக்கு ஆண்டுக் கையொப்பம்		3	0
கழகப் பங்காளிகளுக்கும், மாணவர்களுக்கும்	,,	2	8
வெளிநாடுகளுக்கு	,,	3	8

மாதிரிப் பிரதி விலை 4 அணா

குறிப்பு:—பினாங், சிங்கப்பூர் தவிர பிற வெளிநாடுகளிலுள்ளவர்கள் முன்பண மனுப்பியே பத்திரிகையினைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோரும், விளம்பரங்கொடுக்க விரும்புவோரும் அடியிற்காணும் விலாசத்திற்கு எழுதுக.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
சென்னை & திருநெல்வேலி.

உமாபதி சிவாசாரியர்.

ஓம்

திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றும்

திங்கள்தோறும் வெளிவருவது

சிலம்பு ரு	மெய்கண்டார் ஆண்டு-எ௱௩ கார்த்திகைத்திங்கள் 1925ஆ நவம்பர்—டிசம்பர்ம	பரல் ௧௧

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

இறையனார் அகப்பொருள்

[கா. சுப்பிரமணிய பிள்ளை M.A., M.L.]

(௩௮௨-ம் பக்கத் தொடர்ச்சி)

நலம்புனைந் துரைத்தலின்பின் பிரிவுரைத்தல் நிகழ்தற்பாலது. இதற்குரிய இயைபினைக் களவியல் உரையாசிரியர் மிகவும நயமாக விளக்கியுள்ளார். தலைவன் தன்னைப் புகழ்ந்தவிடத்து, தலைவி நாணமெய்தி ஆற்றாளாக, அதனையுணர்ந்த தலைமகன் தலைவி பெருநாணுடையளாகலின் தங்கள் களவொழுக்கத்தைப் பிறர் உணர்ந்தால் மானமிகுதியால் உயிர்நீக்குமோவெனக் கவ

லைப்படவும், அக்கவலையைக்கண்ட தலைவியும் அவன் தன்மை எய் தினமையால் அத்தன்மையின் வைத்துப் பிரிந்தவிடத்தும் தன் குறிப்பன்றி இரந்துபடாளாதலின் தமது ஒழுக்கம் வெளிப்படா வண்ணம் பிரிதலை அறிவிக்கத் துணிவனென்று ஆசிரியர் விளக்கிப்போந்தார். பிரிவினை யுணர்த்துமுறைமை மிகவும் குறிப்புநயம் தோன்றும் வண்ணம் அகப்பொருட் கோவைகளுள் அமைக்கப்பட்டுள்ளது. தமது ஒழுக்கத்தைப் பிறர் அறிதல் கூடு மாதலால் பிரியவேண்டுமென்று தலைவன் கூறுவது 'நின்னிற்பிரி யேன் பிரியினும் ஆற்றேன்' என்ற சொற்றொடரால் பிரிவுணர்த் துதல் தெரிவிக்கப்படுகின்றது. திருச்சிற்றம்பலக்கோவையா ருள்ளும் 'நின்னை யானகன்று ஆற்றுவனோ' என்று இப் பொருளே அமைக்கப்பட்டுளது. தஞ்சைவாணன்கோவையுள் ளும் 'பெண்கொடியே பிரியேன் தரியேன் நிற்பிரியினுமே' என் றது காண்க. திருக்குறள் ஆசிரியரும் பிரிவச்சத்தைக் குறிப் பாகக் கூறியுள்ளார்.

> "உடம்பொ டுயிரிடை யென்னமற் றன்ன
> மடந்தையோ டெம்மிடை நட்பு".

இத்திருக்குறட் செய்யுளுள் வெளிப்படையாக ஒழுக்கம் புல னாகாவண்ணம் பிரிவு நேர்ந்தாலும் இருவர்க்கும் உள்ள நட்பு மாறுவதில்லை என்றகருத்தே சிறப்பாக அமைக்கப்பட்டது. அது வன்புறை என்று கூறப்படும்.

பிரிவைப்பற்றிப் பேசியபோது அதனை நினைந்து தலைமகன் கவன்றகாலை உண்மையாகப் பிரிவென்பது கிடையாது, மாறாத உள்ளக்கலப்பு அடைந்தமையால், என்று வற்புறுத்துவது பிரி வச்சத்தின்பின் நிகழற்பாலது. ஆசிரியர் தொல்காப்பியனார் பிரிவச்சங் கூறுதலை 'நகைநனியுறாஅத அந்நிலையறிதல்' என் னும் சொற்றொடரால் பெறவைத்தார். பிரிவுகேட்ட தலைமகள் கவலை எய்துதலை 'மெலிவுவிளக்குறுத்தல்' என இயம்பினர். வன்புறையைத் தம் 'நிலையுரைத்தல்' என இயம்பினர். வன்புறை யென்பதற்குக் களவியல் உரையாசிரியர் தனி எடுத்துக்காட்டுக் கூறவில்லை. அது திருச்சிற்றம்பலக் கோவையாருள் 'அருட்குண

முரைத்தல்' என்னும் துறையாக அமைக்கப்பெற்றுளது. இருவர் நட்பும் கடவுளது திருவருளால் அமைந்ததாகலின் அதனை ஒருவருஞ் சிதைத்தல் முடியாது என்ற கருத்து பின்வருந் திருக்கோவையார் அடிகளுள் வந்தமைகாண்க.

> "தேவரிற் பெற்ற நஞ்செல்வக் கடிவடிவார் திருவே
> யாவரிற் பெற்றினியார் சிதைப்பார்".

தஞ்சைவாணன்கோவையுள்ளும் 'விதிகூட்ட'நம்மில் பின்னிய காதற் பிரிப்பவர்யார்' என்பது கூறப்பட்டது. தலைவியின் 'மெலிவு விளக்குறுத்தல்' என்பதற்குக் களவியல் உரையுள் தனி உதாரணங் காணப்படவில்லை. 'இடம் அணித்து' என்னும் துறையில் குறிப்பாக அது சுட்டப்பட்டது. தஞ்சைவாணன் கோவையுள்ளும் அவ்வாறே பிரிவச்சம் கூறும் பாட்டினுள் சுட்டப்பட்டது. 'இவ்வண்ணம் நீ இரங்கேல் இரங்கேல்' என்று வந்தமைகாண்க. திருச்சிற்றம்பலக்கோவையார் ஒன்றில்மாத்திரமே இத்துறைக்குத் தனிச்செய்யுள் அமைந்துள்ளது. அதற்குப் 'பருவரலறிதல்' என்னும் சொற்றொடர் ஏற்பட்டுளது.

> "நீங்கிற் புணர்வ ரிதென்றே நெடிதிங்ஙனே யிருந்தா
> லாங்கிற் பழியாமென வோவறியே னயர்கின்றதே".

வன்புறை என்பது இருவர் நட்பின், செறிவு கூறுதல், இடமணித்து என்று கூறுதல் என்று இருபகுதிப்படுமென்பர். நட்பின் மிகுதியை ஆசிரியர் திருவள்ளுவர் இருவருடைய காதற்சிறப்பின் வைத்துரைத்தார். திருக்கோவையாருடையார் திருவருட் புணர்ப்பின் வைத்துரைத்தார். தஞ்சைவாணன் கோவை ஆசிரிர் விதியைக் காரணமாகச் சுட்டினர். ஆசிரியர் திருவள்ளுவர் கூறிய முறையே பண்டை முறையாகும். அது

> "யாயும் யாயும் யாரா கியரோ
> வெந்தையு நுந்தையு மெம்முறைக் கேளிர்
> யானு நீயு மெவ்வழி யறிதுஞ்
> செம்புலப் பெயனீர் போல
> வன்புடை நெஞ்சந் தான்கலந் தனவே"

என்ற சங்கச் செய்யுளுள் மிக்க நயம்பெற அமைந்துண்மை காண்க.

> "புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதா
> னட்பாங் கிழமை தரும்"

என்ற திருக்குறளின் கருத்திற்கிணங்க எழுமையுந்தொடர்ந்து வரும் உணர்ச்சியொருமையே தலைவனையும் தலைவியையும் இயற்கையாகக் இயைவிக்கும் கழிபேரன்பினை விளக்கற்பாலதென்பது ஈண்டு உய்த்துணரக் கிடக்கின்றது.

இடமணித்து என்னும் துறையானது ஆசிரியர் தொல்காப்பியனர் கூறிய 'தெளிவகப்படுத்தல்' என்பதனுள் அடங்கும். அஃதெவ்வாறெனில் இருவர்க்கும் ஒருதலையாய அன்புண்மை உணர்ந்த தலைமகள் அவ்வன்பு வெளிப்படுத்தற் கேதுவாகிய ஒழுக்கம் நிகழ்வதற்குத்தலைவனை அடிக்கடி காணுதற்கு இயைபுண்டோவென்று ஐயுற்றகாலை அவ்வையந் தீர்த்தற்பொருட்டு, இடமணித்து (என்பது தலைவனது இடம் அணிமைக்கண் இருப்பதென்று தெரிவித்தல்) இன்றியமையாமைகாண்க. அது

> "அம்மெல் லோதி விம்முற் றழுங்க
> லெம்மலை வாழ்ந ரிரும்புனம் படுக்கிய
> வரந்தி னவியறுத் தறுத்த சாந்தநும்
> பாரந் தேந்தல் குற்றிருந்து தழையுதவும்
> பண்பிற் றென்ப வண்மை யதனுற்
> பல்கால் வந்துநம் பருவா தீர
> வல்கலும் பொருந்துவ மாகலி
> னெல்கா வாழ்க்கைத் தாகுமென் னுயிரே"

என்ற செய்யுளுள் நன்கு விளக்கப்பட்டமை தெளிக.

தலைவனது இடம் அருகே யுள்ளதென்பதைப் பாநயம் தோன்றும்வண்ணம் கோவைச்செய்யுள் குறிக்கும். தலைவனது ஊரில் உள்ள உயர்ந்த மாடங்களிற் கட்டிய கொடித்தொகையின் நிழல் ஒருங்குசேர்ந்து தலைவியினது ஊரி லுள்ள வீதிகட்கு நிழல் தருமென்றும் தலைவியினது குறிஞ்சிப்புனத்தில் காவலரிட்ட தழலின் ஒளியானது தலைவனது ஊர்மன்றத்தின் இருளை

நீக்கவல்லது என்றும் பொருள்படும் செய்யுட்களைக் களவியல் உரையாசிரியர் எடுத்து வழங்கினர்.

"............................எம்மூர்த்
தூவணமாடச் சுடர்தோய் நெடுங்கொடி துன்னி நம்மூ
ராவண வீதியெல்லா நிழற் பாய்நின் றணவருமே"

"........ ....நமர்கள்
குன்றைத்திடைப் புனங் காவலரிட்ட குருஉச் சுடரெம்
மன்றத்திடை யிருணீக்கும் படித்தெங்கள் வாழ்பதியே"

திருச்சிற்றம்பலக்கோவையாருள் தலைவனது பதியிலுள்ள மலை போலும் மாளிகைகளின் நுண்ணிதாகிய சாந்தின் ஒளியானது தலைவியினது ஊரிலுள்ள கரியகுன்றத்தின் மேற்படுவதால் அக் குன்றம் வெண்சட்டை இட்டதுபோலத் தோன்றுமென்று ஒளியின் இயற்கைநயம் தோன்றக் கூறப்பட்டது.

"..................எம்மூர்ப்
பருங்குன்ற மாளிகைநுண் களபத் தொளிபாய நம்மூர்க்
கருங்குன்றம் வெண்ணிறக் கஞ்சுக மேய்க்குங் கனங்குழையே"

தஞ்சைவாணன்கோவையுள்ளும் தலைவனது ஊரிலுள்ள வேங்கைமரமானது தனது பொன்போன்ற பூக்களைத் தலைவியினது ஊரிலுள்ள காந்தள் மலரது கையகத்தே இடும் என்று இத்துறையானது விளக்கப்பட்டது.

"......................எஞ்சார லகத்தவர்தேங்
கணிபொன் சொரியுநின் சாரன்மென்காந்தளங் கையத்தே"

ஈண்டுக்கூறிய பாட்டுக்கள் நுட்பமாகிய உள்ளுறை பொருளையுமுடையன. கொடியின மறைப்பால் நிழலமையுமென்றவிடத்துத் தலைவன் கொடியாடுவதுபோலக் காதல் மிகுதிபற்றித் தலைவிபால் பன்முறை சென்று அவளது பிரிவாற்றுமையாகிய துயரை நீக்குவனென்பதும் தலைவியினது ஒளிமிக்க பேரழகினல் தலைவனது பிரிவுத்துன்பம் நீங்கற்பாலதென்னும் குறிப்பினைப் 'புனங் காவலரிட்ட குறாஉச்சுடர் எம்மன்றத் திடையிருணீக்கும்' என்றதனல் அமைந்தும் வருதல்காண்க. திருக்கோவையார்ச்

செய்யுட்கும் இவ்வாறேகொள்க. தஞ்சைவாணன் கோவையுள் அன்புபற்றித் தலைவன் பொன்கொடுக்கத் தலைவிபெறற்குரியவள் என்பது குறிப்பால் உணர்த்தப்பட்டது.

(தொடரும்)

நம்பியாண்டார் நம்பிகள்

[C. S. இராஜாப் பிள்ளை.]

(௪௪௫-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்நம்பியாண்டார் நம்பிகள், வேத விதிப்படி உபநயனஞ் செய்விக்கப்பெற்று, எல்லாக் கலைகளையும் இடையறா முயற்சி யுடன் ஓதிவரு நாட்களில் ஒரு நாள் தாதையார் வேற்றூர்புக, அவர் இட்ட கட்டளைப்படி அத்திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளை யாரை வழிபட வேண்டி பூசைத் திரவியங்களனைத்தும் உடன் கொண்டு சென்று திருமுன் பெய்தி, முறைப்படி அபிடேகஞ் செய்து, நிவேதனத்தை வைத்து, எம்பெருமானே! திருவமுது செய்தருள வேண்டுமெனப் பன்முறை வேண்டவும், பெருமான் அமுது செய்யாமை கண்டு மனமறுகி பெருமானே! அடியேன் ஏதேனுந் தவறிழைத்தேனோ! அடியேன் கொணர்ந்த திருவமு தைத் தேவரீர் ஏற்றுக்கொள்ளாததேனோ! எனக்கவலைகொண்டு ஆங்கோர் சிலையில் தலையை மோதப் புகுந்த காலை, பெருமான் திருவுள மிரங்கி, நம்பீ! பொறு எனத் தடுத்து, அந்நிவேத னத்தை அமுது செய்தருள, நம்பிகள் மகிழ்ந்து, விநாயகப் பெருமானை நோக்கி, எந்தையே! இனி அடியேன் பள்ளிக் கேகில் எங்கள் தேசிக னடிப்பன். ஆதலாலே சந்தமறை முதற்கலைகள் நீயே ஓதித் தரல் வேண்டும், எனவேண்டி நிற்ப விநாயகப் பெரு மான், ஐயந்திரிபின்றி அனைத்தும் உணர்த்த, உணர்ந்து அன்று முதல் நாடோறும் அக்கடவுளை, அவ்வாறே பூசைபுரிந்து வரு வாராயினர். இவ்வரலாற்றினை நமது அபயகுலசேகர சோழ பூபதியாம் இராச ராசன் கேள்வியுற்று, அவ்விநாயகரையும்,

நம்பிகளையுந் தரிசிக்க விரும்பி, வாழைக்கனி, அவல், அப்பம், எள்ளுருண்டை முதலிய பல நிவேதனப் பொருள் கொண்டு, மிகுந்த சேனைகள் புடைசூழ அந்நகரடைந்தான். அடைந்த அரசன் தான் கொணர்ந்த பொருள்களை வைப்பதற்கு அந்நகரில், இடம் போதாமையால், நகரத்தைச் சூழப் பதின்காத தூரம் பரப்பி, நம்பிகளை யடைந்து வணங்கி, யான் கொணர்ந்தவைகளை விநாயகப் பெருமான் அமுது செய்யும்படி அருள்புரிய வேண்டு மெனக் குறையிரப்ப அவரும் மகிழ்ந்து அவற்றைச் சுத்தி செய்து, நிவேதிக்க, விநாயகப் பெருமான் உவகையுற்று அமுது செய்ய விரும்பித் தமது துதிக்கையை நீட்டியருளினர்.

புகர்முகக்கை புறப்படவே படைத்த வெல்லாம்
புகுந்தவிட மறியாமற் போன பின்னை
அகநெகிழ மெய்யரும்பிக் கண்ணீர் வார
நம்பிகழ லன்பினு லரசன் போற்றி
மிகவுமொரு விண்ணப்ப மடியேற் குண்டு
வேதியனே கேளென்று விளம்புவான் மெய்ப்
புகழதுசேர் மூவர்தமிழ் தொண்டர் செய்தி
பூதலத்தில் விளங்கவெனப் போற்றி நின்முன்.

இவ்விண்ணப்பத்தைக் கேட்ட நம்பிகள், நமது விநாயகப் பெருமானை யடிவணங்கிக் கேட்டு உணர்த்துவதாக விடையளித்துப் பெருமான் திருமுன் பெய்தி, முறையிடக்கேட்ட விநாயகப் பெருமான், மூவர் தமிழும் ஐந்தொழிற்கூத்த னமர்ந்தருளிய சிற்சபையின் மேற்பால் அவர்களது கை யிலச்சினையுடன் சேமிக்கப் பட்டிருக்கின்ற தெனக்கூறித் தொண்டர் பெருமையையும் விளங்க வுரைத்தனர். நம்பிகளும் அரசனை யடைந்து, மன்னர் பெருமானே! திருவருட் பெருஞ் செல்வர்களாகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனுர் முதலிய மூவர் தமிழும் தில்லையம்பதி யிற் திருநடம்புரியும் ஞானசபையின் மேல்சார் அவர்கள் கை முத்திரையுடன் சேமிக்கப் பட்டிருக்கின்றன. அவற்றுள் திருஞான சம்பந்தருடைய பதிகம் அம்பிகை செம்பொற் கிண்ணத் தமுத ஞானங் கொடுப்ப அழுகை தீர்ந்து, தாதையார் வினவிய பொழுது, உச்சியின் மேலெடுத்தருளும் ஒரு திருக்கை விரற்

சூட்டிப் பாடிய "தோடுடைய செவியன்" என்பது முதலாக நல்லூர்ப்பெருமணத்துப் பாடிய "கல்லூர்ப் பெருமணம்" என்ப திருகப் பதினாறாயிரமும், திருநாவுக்கரசர் திருப்பாடல் சூலை தீரப் பாடிய "கூற்றாயினவாறு" என்பது முதலாகப் புகலூரிற் பாடிய "எண்ணுகேனென் சொல்லி எண்ணுகேனோ" என்ப திருக நாற்பத் தொன்பதினாயிரமும், பின்னர்ச் சின்னாள் கழித்து, நம்பியாரூரர் பாடியன, தடுத்தாட்கொண்டபோது திருவெண்ணெய் நல்லூரிற் பாடிய "பித்தா பிறைசூடி" என்பது முதலாகத் திருக்கைலைமால்வரையிற் பாடிய "தானெனை முன்படைத்தான்" என்பதிருக முப்பத்தெண்ணாயிரமுமாம் எனவும், இத்தமிழ்மறை பல தெய்வங்களைப் புகழ்ந்துகூறும் வேதம் போலன்றிச் சிவபெருமான் ஒருவனையே முதற் கடவுளாகக் கூறலின் வேதத்தினுஞ் சிறப்புடையது. ஆற்றிலெதிர்த்துச் செல்லும் ஆற்றலுடையது. எலும்பினைப் பெண்ணாக்குவது. விஷவேகத்தை மாற்றுவது. முதலைவாய்ப் பிள்ளையை யழைப்பது. இன்னும் இவைபோன்ற பற்பல சிறப்புக்களுடையது என அதன் பெருமையையுங் கூறக்கேட்ட மன்னவன் மனமகிழ்ந்து, வித்தக விநாயகன் விரைகழல் போற்றி விடைகொண்டு நம்பிகளுடன் நாற்றிசையும் புகழ்மாட்சிமிக்குடைய சிதம்பரத் தலத்தை யடைந்து, நடராசப் பெருமானை வணங்கித் துதித்துத் தில்லை மூவாயிரவர்க்கும், நாற்பத் தெண்ணாயிரந் திருத்தொண்டர்கட்கும் ஏழாயிரத்துத் தொளாயிரம் மெய்காப்பாளர்க்கும் விநாயகரருளியபடி விளம்ப,

அத்தகையோர் தமிழ்வைத்த மூவர் வந்தால்
அறைதிறக்கு மெனவுரைப்ப வாசன்றானும்
மெய்த்தகுசி ரம்பலவர்க் குற்றசெல்வ விழா
வெடுத்து விளம்புதமிழ் மூவர் தம்மை
உய்த்தனிவீ தியினிறுலா வருவித் தும்பர்
நாயகன்றன் கோயில்வல மாக்கி யுள்ளே
சித்தமெலா முருக்குதமி ழிருக்கை சேரச்
சேர்த்தியவர் சேர்ந்ததெனச் செப்பிநின்றான்.

நின்றகாலை, ஐயர் நடமாடும் அம்பலத்தின் மேல்பால், அம்மூவர் கை யிலச்சினையோடு வைக்கப்பட்டிருந்த திருக்காப்பை நீக்கப்,

பொய்யுடையா ரறிவுதனைப் புலன்கள் மூடும் பொற்பதுபோல் போதமிடு பாடல் தன்னை நொய்யசிறு வன்மீக மூடக்கண்டு, அரசன் நொடிப் பொழுதின் மனநொந்து, அவற்றை வெளியிற் றோணர்வித்து, மூடிய வன்மீகப் புற்றை யகற்றித் தைலங்களை நிறையப்பெய்து எடுத்து நோக்க, அளவிறந்த ஏடுகள் பழுது படக்கண்டு, பரனே! பரனே! என்று பன்முறை கூறிக் கண்ணீர் சொரிந்து, சிந்தை கலங்கி நின்றான். அக்காலையிற் பரசிவப் பெருமான் திருவருளால் வானிடத்தே "சைவநெறித் தலைவ ரெனு மூவர் பாடல் வேய்ந்தனபோல் மண்மூடச் செய்தே யீண்டு வேண்டுவன வைத்தோமென் றுலகினுள்ள மாந்தரொடு மன்னவனுங் கேட்கு மாற்றால்" ஓர் அசரீரி தோன்ற அரசன் அளவிலாக் களிப்பெய்தி, ஆனந்த அருவிசொரிய, உடல் புளகங் கொள்ள, சிவபெருமான் திருவருளைப் பலவாறு புகழ்ந்து, ஆடிப் பாடி, நம்பி கழல் வணங்கி இத்திருமுறையை முன்போல வகுத் தருள்கவென வேண்ட, அவரும் பிள்ளையார் அருளிய பதிகங் களை மூன்று திருமுறைகளாகவும், அப்பர் அருளிய பதிகங்களை மூன்று திருமுறைகளாகவும், ஆரூரர் அருளிய பதிகங்களை ஒரு திருமுறையாகவும் (ஆக 7. திருமுறைகளாக) வகுத்து, திருவா சகம் திருக்கோவையார் இவ்விரண்டையும் எட்டாந் திருமுறை யாகவும், திருமாளிகைத்தேவர் முதலியோர் அருளிய திரு விசைப்பாக்களையும், சேந்தனர் திருப்பல்லாண்டையும் ஒன்ப தாந் திருமுறையாகவும் திருமூலர் திருமந்திரத்தைப் பத்தாந் திருமுறையாகவும் ஆலவா யவிர்சடைப் பரமனருளிய திருமுகப் பாசுர மாதியவற்றைப் பதினொராந் திருமுறையாகவும் வகுத்து, மன்னவன் வேண்டுகோளால் தாமியற்றிய விநாயகர் திருவிரட்டை மணிமாலை, கோயிற்றிருப்பண்ணியர்விருத்தம், திருத்தொண்டர் திருவந்தாதியாகிய இவற்றையும் பதினொராந் திருமுறையுடன் கூட்டினர். பின் இவரியற்றிய நூல்களும் அவ்வப்போது சேர்க்கப்பட்டன. அப்பொழுது தில்லைவாழந்தணர்கள் இவ் வரசனுக்குத் திருமுறைகண்ட இராஜ இராஜன், அருள்மொழி என்னும் பட்டப் பெயரளித்து ஆயிரக்கால் மண்டபத்துத் துலாபாரம் புகச்செய்து, செம்மை செய்தனர்,

அப்பால் அரசன் திருமுறைகட்குப் பண்ணடைவு செய்யக் கருதி, நம்பிகள் முதலிய பெரியார் பலருடன் திருவெருக்கத் தம்புலியூரை யடைந்து, திருக்கோயிலை வலங்கொண்டு பணிந்து, எம்பெருமானே! இத்திருமுறைகட்குப் பண்ணடைவு தரவேண்டு மென வேண்ட அப்பொழுது யாவருங் கேட்ப ஆகாயத்திலே, 'அன்பர்களே! திருநீல கண்டப் பெரும்பாணர் மரபிற்றோன்றிய ஒரு பெண்ணுக்குப் பண்களை அருளிச் செய்தோம்' என ஓர் அசரிரி தோன்றியது. உடனே, அரசனும் நம்பிகளும், அவளை அழைத்து அவள்பால் இசையைக்கேட்டு மகிழ்ந்தார்கள். அப்போது மீட்டும் "ஆங்கவளை அம்பலத்து ளாடுவார் திருமுன்பு, பாங்கினுடன் கொடு வந்து பண்ணடைவு வகுக்க" வென ஓர் அசரிரி கூற அனைவருந் தில்லையை யடைந்து அம்பலத்தின் முன் அமர்ந்து பண்ணடைவு வகுத்தனர்கள். திருமுறைகண்ட சோழன் இத்திருமுறைகளைச் செப்பேடு செய்வித்துத் தனது தலை நக ராகிய ஆரூர் சென்று, தியாகராஜப் பெருமான் சந்நிதியில் ஏற்று வித்தான். அப்பொழுது அந்நகரத்தார் அவனுக்குச் சிவபாத சேகரன் எனப் பட்டப்பெயர் புனைய மகிழ்ந்து, திருமுறைகளைப் பெரிதும் போற்றித் தரணியை யாண்டுப் பின் தன் மகன் இரா ஜேந்திரனுக்கு முடி சூட்டி, நடராசப்பெருமான் றிருவடி நீழற் பிரியாப் பெரும் பேறுபெற்றான். அப்பால் நம்பியாண்டார் நம்பிகள் தில்லை வாழ்ந்தணர் முதலிய பெரியாருடன் சிலநாள் சிதம்பர தலத்தே வாழ்ந்து, திருமுறைப் பெருமையை அனை வருக்கும் உபதேசித்து, திருஞான சம்பந்த மூர்த்திகளைத் தமக்கு உபாசன மூர்த்தியாகக் கொண்டு, அவரது திரு வடியையே இடையறாது தியானித்து, காழிப்பதி சென்று, அவர் மீது, ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி முதலிய நூல்க ளியற்றி அந்நகரத்திலேயே வசித்து வந்தனர். இது (மும்-கோவை 5. பாட்டு) "சுத்தர்கள்சேர் காழிச் சுரன்ஞான சம்பந்தன், பத்தர்கள் போம் வாழும் பதி" (பாட்டு 29.) "மாம்பொழில்சேர் வைகை யமண்மலைந்தான் வண்காழிப், பூம்பொழிலே சேர்ந்தி ருப்பர் புக்கு" என்பன முதலாகத் தாமியற்றிய பாசுரங்களா லும் உணரக்கிடக்கின்றது.

இன்னும் இப்பெரியார் நாவுக்கு வேந்தரையும் உபாசனை செய்து அவரருளுங் கைகூடப்பெற்றாரென்பதும் "அலகின் ஞானக் கடலிடைப்படு மகிழ்தயோகச் சிவவொளிப்புக, அடியரேமுக் கருளினைச்செயும் அரையதேவத் திருவடிக்களே" எனத் தாம்பாடிய திருநாவுக்கரசர் திருவேகாதசமாலையானும் உணரப்படுகிறது.

இவ்வாறு மேற்கூறிய இருபெருங்குரவரையும் இடையறாது வழிபட்டுப் பின்னர்ச் சிலகாலங் கழித்துச் சிவபெருமானோடு இரண்டறக் கலந்தருளினர்.

(தொடரும்)

அகம் புறம்

[க. ப. சந்தோஷம், B. A., L. T.]

(முன் சஙஉ-ம் பக்கத் தொடர்ச்சி)

உளத்திற் றோன்றுவது உண்மை. அங்ஙனந் தோன்றியது வெளிப்பொருளுடன் ஒப்பிடப்படுகையிற் றவறாகவாவது திருத்தமாகவாவது இருக்கலாம். தவறாயிருப்பினும் அஃதுண்மையே. தாம்பைப் பாம்பென ஒருவன் பிறழக்கொண்டகாலையும், அவன் வரையி லஃது உண்மையே. இது திரிபு உணர்ச்சியெனக் கூறுவர். ஆனலிது பிறர்க்குத் திரிபுணர்ச்சியாகத் தெரியுமேயன்றி பிறழ உணர்ந்த மகனுக்குத் திரிபுணர்ச்சியாகாது. தாம்பைப் பாம்பெனக்கொண்டு அது தம்மேல் விழுந்ததன் பயனாகக் குலை கலங்கி நஞ்சேறியவரு முளரெனக் கூறுவர். நஞ்சை உணவென உட்கொண்டு பிழைத்தாருமுளர். ஒன்றை மற்றொன்றாகக் கருதியவர் தாம் பிறழ உணர்ந்ததை அறியுங்காறும் அவர்க ளகத்திலெழுந்தது எதுவோ அதுவே உண்மை. ஆயின், உண்மை என்பது புறப்பொருட்களுடன் எவ்வகைத் தொடர்புமில்லா ஒன்றாமேவெனின், எமைப்போல் சிற்றுணர்வுங் குற்றறிவுமுடையோர்க்கு, உளத்திற்றோன்றுவதற்கும் வெளியிலிருப்ப

வற்றிற்கும் மிகுந்த வேற்றுமை காணுமெனினும், தூய உணர்ச்சியும் நல்லறிவுமுடைய மேன்மக்கள் அகத்தைப் புறமாகவும் புறத்தை அகமாகவுங் காணவல்லார் என்றே கொளல்வேண்டும். பல்வேறு நூலறிவைப் படைத்தவர் இதற்கு ஏற்ற விடையளித்தல்கூடும். ஆயினும் நமது தமிழ் முன்னோர்கள் நெஞ்சை முதலாகவைத்து உண்மையை யதன்பாற் சேர்த்தன ரென்பதி லையமில்லை.

இனி, 'உளது' எனுஞ் சொல் 'இருக்கிறது' எனப்பொருள் படுவதால் இவ்விரண்டிற்குமுள்ள பொருத்தத்தை யறிவது நன்று. உளது என்பது உண்டு எனவும்வரும். அதிலும் உள் என்பதே முதனிலையாகும். ஒன்று இருப்பதும் இல்லாததும் மக்கள் நெஞ்சில் அது தோன்றுவதும் தோன்றாமையுமே. ஆகலின், இருத்தலும் உளதாதலும் ஒன்றேயாகும். உணர்ச்சிக்கு எட்டாத பொருளைப்பற்றி அறிவுமில்லை பேச்சுமில்லை புலன்களின் வழியாய் அல்லது காட்சியின் வழியாய் ஒன்று கருத்தில் வடிவங்கொண்டபின்னரே, அது இருக்கிறது அல்லது இல்லை என்று பேசுவதற் கிடமுண்டு, "இருப்பதுபொய், போவதுமெய்" என்றதில் இருத்தல் எனுங்கிளவி உயிர்வாழ்தலைக் குறித்தது. இதனால், உயிர்வாழ்தல் என்பதும், அகத்தின் நிகழ்ச்சியே என்பது பெறப்படுகிறது. வாழ்க்கை எனப்படுவது நெஞ்சிற்றோன்றும் நினைவு உணர்வு துணிவுகளின் தொகுதியேயாகும் ஆனால் சொல் செய்கை முதலியவை வாழ்க்கையின் கூறுகளாகாவோவெனின், இவை நினைவு உணர்வுகளின் வெளியீடேயாகுமாதலால் அது கடாவன்று. வடமொழியில் உண்மை என்பது (सत्यं) சத்தியம் என்ற மொழியால் உணர்த்தப்படும். இதன் முதனிலையாகிய(सत्)சத் என்பதன்பொருள் 'இரு' என்ற தமிழ்ச்சொல்லாற் குறிக்கப்படுவது, (तत् सत्) தத், சத்,=அது, இருக்கிறது இந்த சத் (सत) என்ற முன்னிலையே ஆங்கிலத்தில் Sooth என்று வருவதாக மொழிநூற்காரர் விளம்புகின்றனர். இவ்வாங்கிலச்சொல்லும் 'உண்மை' என்றே பொருள்படும். Forsooth என்ற மொழியுடன் ஒப்பிடுக. இஃதன்றி 'இருத்தல்' என்பது அமர்தலையுங் குறிக்கும். அமர்தல் = உட்கார்தல்.உட்.

கார்தல் என்றசொல் உள் என்ற அடியைக்கொண்டு பிறப்ப தென்று தெரிகிறது. ஆயினும், அமர்தலுக்கும் உள் நிகழ்வ தற்கும் யாது தொடர்பு உளதென்று விளங்கவில்லை. பண்டைத் தமிழர் அகத்திற்கும் புறத்திற்குமுள்ள ஒற்றுமை வேற்றுமை களை எவ்வளவு ஆழ்ந்து கருதித் தாம் அறிந்தவற்றைத் தக்க சொற்களில் அமைத்துப் போயினரென்பது இறையனாரகப் பொருளாலும் தொல்காப்பிய பொருட்பகுதியாலும் தெள்ளிதி லறியப்படும். மேல்நாட்டு உண்மை ஆராய்ச்சியாளரிற் சிலர், மக்களுளத்தில் நிகழ்வதேயன்றி வேறு பொருள் உலகத்தி லுண்டோவென்று ஐயுற்று. நெஞ்சிற் றோன்றுவது தவிர பிறி தொன்றுங் கிடையவே கிடையாது என்றுங் கூறிப்போந்தனர். இதற்கெதிராக மற்றுஞ்சிலர் வையகத்தில் இல்லாதது கருத் திலும் இல்லை என்றறைந்தனர். இவற்றுடன் தமிழர் கருத்தை ஒப்பிடுக. உண்மை ஆராய்ச்சியில் எனது தேர்ச்சி மிகச் சுருக்க மாகையால் இதைத் தொடர்ந்துபோக நாணுகின்றேன். அவ்வா ராய்ச்சியில் வல்லவர் இதைத் தொடர்ந்து சென்று முடிபு காண் பாராக.

இனி வாய்மை என்பது உண்மைக்கு மறுபெயராய் வழங்கு தலின் அதையுமாராய்தல் நன்று. வாய்மை என்பது சொல்லின் படி வாயின்தன்மை என்று பொருள்படும். ஆகையால். அது உளத்தின் குறிப்பைக்காட்டும். உண்மை என்பதுடன் தொடர் புடையதேயன்றி அதனுடன் ஒன்றாகாது. இயற்கையாய் வாய் பேசுவது, உளத்தில் நேராகத்தோன்றியதையே. ஒருபொரு ளுக்கும் அதன்பெயருக்கும் உள்ள கேண்மை உளத்திற்கும் வாய்க்கும் உண்டு. எங்ஙனம் ஒருபொருளினின்றும் பெயரைப் பிரித்தலரிதோ, அங்ஙனமே, உண்மையினின்றும் வாய்மையைப் பிரித்தலு மரிதாகும். ஆதலின், வாய்மை என்பது செவிக்குப் புலனாகும் உண்மையின் ஒருவடிவமாம். வாய்மை என்பதற்கு இதுபொருள் என்பது மெய்ம்மை என்றசொல்லை உற்றுநோக்கு வதாலும்' வெளிப்படும். மெய்ம்மை=மெய்யின் தன்மை; அதா வது 'உடலின் பான்மை' உளத்திலெழுந்தது வாயாலன்றிப் பிறபொறிகளின் வழியாய்ப் புலப்படுவது மெய்ம்மை ஆகும்.

மெய்ப்பாடு என்பது மக்கள் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்த வாறே புறத்தார்க்கும் புலப்படுவதோர் ஆற்றுன் வெளிப்படுதல் என்று உரையாசிரியர் மெய்ப்பாட்டை வரையறுத்தலால் யாம் கூறுவது வலியுறுகின்றது. உண்மை; வாய்மை; மெய்ம்மை ஆகிய மூன்றிற்குமுள்ள தொடர்பை மூதறிஞராகிய தமிழர் எவ்வாறு கருதினர்களென்பதைச் சொற்களி னுதவியால் விளக்கமுயன் றேன். அகம்; புறம் என்று எடுத்துக்கொண்ட பொருளில் இது இடையே தோன்றியதாதலால்; இனி இதை நிறுத்தி முதற் பொருளுக்குச் செல்வாம்.

(தொடரும்)

சீவகசிந்தாமணி

திருத்தக்கதேவர்

[பெங்களூர். நா. செங்கல்வராயன்.]

செந்தமிழ் மொழியிற் சிறப்புற்றோங்குங் காவியங்கள்* ஐந் தினுள் முற்பட்டதானது திருத்தக்க தேவரா லியற்றப்பட்ட சீவகசிந்தாமணியாகும். இது பழைமையான இலக்கண இலக்கிய உரைகளில் உரையாசிரியர்களால் மேற்கோளாக எடுத்துக் காட் டப்பட்டுள்ள பிரமாண நூற்களில் ஒன்று. இது, நடையில் ஆதி காலத்துச் சங்கத்தின்கண் வீற்றிருந்த தெய்வப் புலவர்க ளியற் றிய இலக்கியங்கள்போற் சிறந்துள்ளது. இதன்கண், வடமொழி யிலுள்ள வான்மீகம்போற் எல்லா வருணனைகளுந் தன்பா லமை யப் பெற்றிருத்தலுமன்றி, மகா காவியமென்றுங் கூறப்பட்டிருக் கின்றது. மேலும் இது பிற்காலத்துக் காப்பியப்புலவர்கள் பலர்க்கும் பல கருத்துக்களைப் பல வழிகளில் வருணித்துப் பாடு மாறு நெறிப்படுத்தி யிருக்கின்றது.

இது சீவகனென்னும் ஒரு வேந்தன் தான் பிறந்ததுமுதல், சுவர்க்கம் புகும்வரையிலுள்ள, கதையைப்பற்றிக் கூறுகின்றது.

---

* காவியங்களாவன :—(1) சீவகசிந்தாமணி, (2) சிலப்பதிகா ரம். (3) மணிமேகலை. (4) குண்டலகேசி, (5) வளையாபதி.

இதைப்படிப்பதால், வேந்தன் மந்திரிகளைப் பலமுறை ஆராய்ந்துத் தெளியல் வேண்டுமென்றும், 'அருங்கடி மங்கையர்த்திறம் திரும்பல்' மிக்கதுயர் விளைக்குமென்றும், தனது ஆசிரியன் கட்டளைப்படியே எப்பொழுதும் நடத்தல் வேண்டுமென்றும், பகையை வெல்லக் கருதுவோன் உரிய காலமும் இடமும் ஏற்படும் வரையில் தனது எண்ணத்தை வெளிப்படுத்தக் கூடாதென்றும், ஏனைய உயிர்கட்கு இடுக்கண் நேருமாயின், அதனைத் தீர்த்தல் வேண்டுமென்றும், தனக்கு ஒன்னலரல்லாதாரை வருத்தலாகாதென்றும், தாய்தந்தையர்களது வாக்கைச் சிரமேற் கொள்ள வேண்டுமென்றும், தக்கதோழமையிருந்தால் தனது எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளலாமென்றும், தனக்கு இன்பம் வந்தகாலத்து வருந்துதலுமின்றி, 'ஆர்வமெய்தலும், ஆரஞரெய்தலும் ஒருடலியற்கை' "பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக்கல்" எல்லாம் வினைப்பயனென்று கருதல் வேண்டுமென்றும், எல்லாரிடத்தும் கருணைகாட்ட வேண்டுமென்றும், பாத்திரமறிந்து பிச்சையிட வேண்டுமென்றும், நெறிகெட்டுப் போவாரை நல்வழிப்படுத்தல் வேண்டுமென்றும், 'பிறர் செய்த நன்றியைக் கொல்லாக் கொளல்' வேண்டுமென்றும் தெரியப்படுகின்றன.

இந்நூலைக்கொண்டு இதற்கு முதனூல் இன்னதென்று நிச்சயிக்கக் கூடவில்லை. சீவகன் சரிதத்தைப்பற்றிக் கூறும் நூற்கள் வடமொழியில் நான்குள. மகா புராணத்திலும், ஸ்ரீ புராணத்திலும் சிற்சில பாகங்களில் இக்கதை கூறப்பட்டுள்ளது. ஆனல் அவற்றிற்கும் இதற்கும் கதையில் சில மாறுபாடுகள் உண்டு.

இந்நூலில், முதலில் கடவுள் வாழ்த்தும், கதையைச் சுருக்கிக் கூறுவதாகிய பதிகமும் அமைக்கப்பட்டுள்ளது. பிறகு நாமகளிலம்பக முதலிய பதின்மூன்று இலம்பக வுறுப்பாகப் பகுக்கப்பட்டுள்ளது. இதன்கண் 3145 செய்யுட்களிருக்கின்றன். ஆனல் அவற்றுள் திருத்தக்கதேவ ரியற்றியது 2700 தான் என்றும் மற்றவை பிறரா லியற்றப்பட்டதென்றும் "மூந்நீர் வலம்புரி" என்னுந் தூக்கினுரையில் நச்சினர்க்கினியர் எழுதியிருப்பதால் தெரியவரும்.

இந்நூலாசிரியரின் பெயர்

திருத்தக்கதேவர். இவர் சோழர் குலத்தவர். இளமையிலே கல்விப்பயிற்சி தொடங்கப்பட்டுச் சிறிது கற்ற பின்பு, நல்லாசிரியரிடம் அகத்தியம், தொல்காப்பியம் முதலிய இலக்கண நூற்களையும் தொன்றுதொட்டுவருஞ் சங்கச் செய்யுட்களையும், இன்னும் அக்காலத்து வழங்கிய நூற்கள் பலவற்றையும் ஐயந்திரிபற ஓதியுணர்ந்து, இம்மாதிரியே வடமொழியினும் பாண்டித்தியமடைந்து, பிறகு தமது மதத்திற்குரிய ஆருகத நூல்களையும் கற்று அவற்றிலும் அதிவல்லராய் நற்குண நன்னடக்கைகள் ஒருங்கே அமையப்பெற்று வயதிற் சிறியராயினும், அறிவிற் பெரியராய் இளமையிலே துறவு பூண்டு தன்னாசிரியரை விட்டகலாது அவர் மனப்படி நடப்பதே தகுதியெனக் கருதி அன்புடன் ஒழுகி பின்பு அவருடன் பாண்டி வளநாட்டிலேயுள்ள திருவாலவாயை யடைந்து ஆங்கு சின்னாள் அமர்ந்தனர். அவவாறமரும்போது, திருத்தக்கதேவர் மதுராபுரியிலே அங்கயற்கண்ணி பங்கனருளினாலே சங்கப் பலகைபெற்று, அதன்க ணமர்ந்து தமிழ் மொழியை வளர்த்தருளும் தெய்வப் புலவர்களது மகிமைகளை யுணர்ந்து, அவர்களோடு பழகவிரும்பி ஆசிரியரது உத்திரவு பெற்றுச் சென்று நாடோறும் அவர்களுடன் பயின்று, தமிழ் மொழியிலுள்ள பழைய செய்யுட்களின் சொற்சுவை, பொருட்சுவைகளைப் பாராட்டியும், அவர்களால் பாராட்டப்பட்டும், இங்ஙனம் அவர்களுடன் அளவளாவி எல்லையற்ற பேரின்பக் கடலிலாழ்ந்து நன்கு மதிக்கப்பட்டு வந்தனர்.

இவ்வாறிருக்கும் நாட்களில் ஒருநாள். புலவர்கள் இவரை யண்மி, "உம்மதத்துப் புலவர் பலர் துறவறத்தைப்பற்றிப் பாட அறிந்துகொண்டார்களே யன்றி, சிற்றின்பத்தைப் பாராட்டிப் பாடத் தெரிந்துகொள்ளவில்லையே, அதற்குச் சான்றாகத் தற்காலத்தில் வழங்கும் காமச்சுவையுடைய நூற்கள் ஒன்றேனும் நும்மவர் இயற்றியதாகக் காணப்படவில்லை" என்றனர். அதற்கவர், "இன்பச் சுவையைப் பாராட்டுதலில் எம்மவர் வெறுப்புற்றிருந்தாரே யொழிய பாடத் தெரியாதிருக்கவில்லை." என்று

மொழிய, சங்கப்புலவர்கள், "அங்ஙனமாயின், காமச்சுவை முழுதும் விளங்கத் தாமே ஒரு நூலியற்றுதிர்" என்றனர்.

பிறகு அவ்வண்ணம் பாடத்துணிந்து, தம்மாசிரியரிடஞ் சென்று நிகழ்ந்தன கூறினர். ஆசிரியர் தமது மாணாக்கன் கருத்தை நன்குணர்ந்திருந்தபோதும் ஒருமுறை பரீட்சிக்கக் கருதி, தம்மிருவர்க்கும் எதிரில் ஓடின ஒரு நரியைக்கண்டு, இச் சம்புகனது குலத்தை ஆதாரமாகக் கொண்டு உமக்குத் தோற்றிய வாறு ஒரு நூல் இயற்றக் கடவையென்றார். தேவர் அதனைப் பற்றுக்கோடாகக் கொண்டு யாக்கை நிலையாமை, செல்வ நிலையாமை முதலியனவெல்லாம் உள்ளங்கை நெல்லிக் கனிபோல எளிதில் புலப்படுமாறு கூடிய சீக்கிரத்தில் நரிவிருத்தம் என்னும் நூலை யியற்றி ஆசிரியருக்குக் காட்ட, அவர் விம்முற்றுத் தனது மாணாக்கன் துறவறத்தின்கண் மனவுறுதி கொண்டிருத்தலைக் கண்டு கழிபேருவகைபூத்து, அவருக்குப் புலவர்கள் கூறிய வண்ணம் காமச்சுவை பெரிதும் விளங்கும்படிச் சீவகன் சரிதையை ஒரு காப்பியமாக வியற்ற உத்திரவு கொடுத்ததுமன்றி அஃது இனிது நிறைவேறுமாறும் "செம்பொன் வரைமேல்" என்னுஞ் செய்யுளொன் றியற்றி அதனால் அருகக் கடவுளைத் துதித்து, இச்செய்யுளைக் கடவுள் வணக்கமாகக் கொண்டு நூலியற்றுதிர் எனத்திருவாய் மலர்ந்தருளினர்.

அதனைச் சிரமேற்கொண்ட தேவர் தாம் "மூவர் முதலா' என்னும் பாடலால் சித்தனைத் துதித்துக் கொண்டிருக்க அதைக் கேட்ட ஆசிரியர் தான் கூறியதைவிட இது மிகவுஞ் செவ்வியதாயிருந்ததை யறிந்து அதை முதலில் நிறுத்தச் சொல்லவும், அதனை மறுத்தற்கஞ்சித் தனது கவிதை முன்னும் ஆசிரியரது கவிதைப் பின்னுமாக வைத்துப்பாட ஆரம்பித்து, எட்டு நாளில் நிறைவேற்றித் தனது குருவுக்குக் காட்ட, அவர் கண்டு களிகூர்ந்து புகழ்ந்து ஆசிர்வதித்து "முந்நீர் வலம்புரி" என்னுங் கவியால் ஓம்படை யுரைத்து, தேவரைப் பார்த்து அதை அப்புலவர்களிடம் அரங்கேற்றிவரச் சொன்னர்.

உடனே திருத்தக்க தேவர் பாண்டியன் சபாமண்டபத்தில் யாவரையுங் கூட்டுவித்துத் தனது நூலை வாசித்துக்காட்ட, அவர்

கள் கேட்டு இந்நூல் சகலலட்சணங்களும் அமையப்பெற்று, எல்லா மதத்தார்க்கும், காலம், இடம் முதலியவற்றிற் கேற்ற வாறு அமைந்திருத்தலை யறிந்து இங்ஙனம் பாடுதல் யாவர்க்கும் அரிதரிது என்று சிரகம்பிதத்துடன் கரகம்பிதஞ் செய்து மகிழ்வுற்றனர். புரவலனும் அம்மாதிரியே புகழ்ந்து மிகவுங் கொண்டாடினன்.

இப்படியிருக்கையில், ஆங்கு சிலர் சந்தேகித்து, இளமை முதல் இத்தேவர் துறவு பூண்டிருத்தல் மெய்ம்மையாயின், மற்றச் சுவைகள்போல் காமச்சுவை இவ்வாறு பாராட்டப்படுதல் சாத்தியமன்று. இந்நூலிலோ அச்சுவை மிகவும் அதிகமாயுள் ளது. ஆகையால் இவர் சிறிது சிற்றின்ப அனுபவ முடைய ராய் இருத்தல் வேண்டுமென்று தம்முள் பேசிக்கொண்டனர்.

இதனை யறிந்த தேவர், யாவருங் காணும்படி இரும்பின் கட்டியை நெருப்பில் பழுக்கக் காய்ச்சி "நான் பால சந்நியாசியாக இருத்தல் சத்தியமாயின் இது என்னைச் சுடாதொழிக" என்று கட்டுரை யுரைத்து அதனைத் தன் கையினுற் றழுவியும், நாவாற் பரிசித்தும் யாதொரு இடுக்கணு மடையாது சுகமுற் றிருந்தனர்.

இதனைக்கண்டு முன்பு பேசியோர், அஞ்சி, தாம் "தெளி யாது இழைத்த தீத்தண்டம் பொறுத்தி" என்று அடி பணிந் தனர். அவரும் அவர்களை அஞ்ச வேண்டாமென்று அவர்களுக் குப் பல இனிய மொழிகள் கூறினர். இதனைக் கண்ட யாவரும் அவரது துறவொழுக்கத்தைக் கண்டு மிகவும் கொண்டாடினர் கள். பிறகு தேவர் அவர்கள்பால் விடைபெற்றுத் தன் ஆசிரிய ரிடஞ் சென்றனர். பின் நிகழ்ந்தனவற்றை அவருக்குத் தெரி வித்து அவருடன் உறைவா ராயினர்.

இவருடைய காலம்

இவர் கடைச்சங்கத்தார் காலத்துக்குப் பிந்தியவரென்றும், இவர் செய்த இந்நூல் உரையாசிரியர்களால் பிரமாணமாக எடுத் துக் காட்டப்படுதலால் உரையாசிரியர்கள் காலத்திற்கு முந்திய வர் என்றும் தெரியவரும். 1200 ஆண்டுகட்கு முன் இருந்தவ ராகக் கருதப்படுகின்றனர்.

செந்தமிழ்ச் செல்வி வழிபாடு

[க. சோமசுந்தரம் பிள்ளை]

செந்தமிழ்ச் செல்வியைத் தாமரை யாட்டியைத் தென்பொதியச்
சந்தனச் சோலையி னேழிசை கூவுந் தனிக்குயிலைச்
சிந்தையிற் பூத்துச் செந்நாவிற் பழுத்துச் செவிப்புலத்தே
வந்து கனியும் பனுவற் பிராட்டியை வாழ்த்துவமே.

வம்மின் புலவீர்! வம்மின் புலவீர்!
இம்மையு மறுமையு நன்மை பயந்து
தொன்மையும் புதுமையு மென்மையுந் தெய்வத்
தன்மையு நிரம்பி யெழுமையுந் தொடர்ந்து
யாழினுங் குழலினும் பாலினுந் தேனினுங்
காணினுங் கேட்பினுங் கருதினு மினிக்கும்
அமுதுறழ் தலைமைத் தமிண்மொழி யுணர்ந்த
மெய்ந்நெறிப் புலவீர்! வம்மினெல் லீரும்!
அந்தமும் நடுவும் ஆதியுந் தெரியாச்
செந்தமிழ்ச் செல்வியைப் போற்றுதும் யாமெலாம்
நெடுங்கட லுலகி னிடந்தொறு மிடந்தொறும்
வானுயர் சங்க மண்டபம் வகுத்து
மான விதானம் வளங்கெழ வமைமின்!
ஊக்கமு நெருங்கிய வொருமையு மென்று
நீக்கமி லுழைப்பு நேர்மையு மென்று
மாக்குலைக் கமுகும் வாழையு நடுமின்!
தூக்குறு குரும்பையுந் தொடையலுந் தொடுமின்!
பொற்புறு பொறுமைப் பொலங்குட நிரைத்துப்
புத்துணர் வென்னும் பொன்முளை பரப்புமின்!
பழையன திருத்திப் புதியன புனைந்து
தூய்மை நறும்புகை யெடுத்து மீயுயர்
வாய்மை விளக்கம் வயின்றொறு மேற்றுமின்!
ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப் பியமெனுந்
தண்டமிழ்க் கனகத் தாமரைப் பீடிகை
மண்டபம் பொலிய வைத்துப் பண்டைநாள்
வடாஅது வான்றொடு வேங்கட மலையுந்

தெனாஅது குமரித் தெண்டிரைப் பௌவமுங்
குடாஅதுங் குணாஅதுந் தொடுகடற் பரப்புமென்
றந்நாள் வரைந்த விந்நான் கெல்லையுள்
அண்டரும் விழையுந் தண்டமி ழகத்தில்
ஆடகக் குடுமி மாடக் கூடலில்
முதலிடை கடையெனு மானொரு மூன்றில்
திரிபுர மெரித்த விரிசடைக் கடவுளுஞ்
சூர்முத றடிந்த வீரவேன் முருகனுங்
கடன்மிடல் சாய்த்த குறுநெடு முனியுந்
தோலா நாவின் மேலோர் குழுவும்
மந்திர மிருந்து தந்திரம் புரிய
ஆரிய மாதி யயற்புல மடவார்
சீரிய கேண்மையிற் சேவடி பரவப்
படியுயர் மண்டலம் மூன்றும் பரிக்கும்
முடியுடை வேந்தருங் குறுநில மன்னரும்
அடியுறை யிய்ந்து குறுவினை யியற்றத்
தெரிதமிழ்ப் பலகை யரியணை மீமிசை
உண்ணெகிழ் வேட்கைத் தன்னொளி விரீஇத்
தேம்பிழி குவளைக ளாம்பல்வாய் மலர்ந்து
முல்லை யரும்பிப் பவளம் பூத்த
முழுமதி யாயிர மொருவயிற் குழீஇய
காட்சித் தன்ன மாட்சிகண் கவரத்
திருவுறை செங்கை நான்கி னொருகை
புத்தகச் செங்கோ லேந்த; ஒருகை
வித்தகத் திவவின் நல்லியாழ் தடவ; ஒருகை
நச்சுநர் நச்சிய விச்சையி னுதவ; ஒருகை
யச்ச மகற்றி யருண்முறை தெரிக்க
உவமையின் றுயர்ந்த தமிழக மன்றியும்
இமிழ்திரை முந்நீர்ப் பெருநில முழுவதும்
பிள்ளைப் பிறைமுடிப் பெம்மா னுறைதரு
வெள்ளியங் கிரியினு மும்பருந் தணாஅது
தெள்ளிய வாணைத் திகிரிசென் றுலாவ

முறைமுறை யிருந்து தனியர சாண்டும் - அதாஅன்று
அருளடை பொதுளித் தெருணிழல் வளங்கி
அன்பு மலர்ந்துய ரின்பம் பிலிற்றும்
மருவா நெறியறி வாதவூ ரெங்கோன்
திருவா சகமெனுஞ் செழும்பொழில் புகுந்து
மருப்பூ முகத்து வல்லிப ராயமொடு
திருப்பூ வல்லி விருப்பொடு கொய்துங்
குயிலொடு கூவியுங் கிளியொடு மிழற்றியும்
பயின்மணிப் பாவை நயமுறப் புனைந்தும்
வாசந் திமிர்ந்து மூச லாடியும்
அம்மனை பாடியுங் கொம்மை கொட்டியுஞ்
சேரன் செய்த திருக்கிளர் சிலம்பிற்
கந்துக வரியிற் பந்துவந் தடித்துஞ்
செவிச்சுவை நிரம்பிய கவிச்சுனை குடைந்தும்
பொழில்விளை யாட லெழில்பெற வாடியும் - அதாஅன்று
நீர்மே னடந்தும் நெருப்பிடைக் குளித்தும்
பார்முதிர் கருங்கடல் பாறையிற் கடந்தும்
மறைபிணி கதவந் திறவெனத் திறந்தும்
சுடுபிணி மாற்றியுங் கருவிடந் தீர்த்தும்
அருள்விளை யாட லளவில் புரிந்தும்
நாப்புடை பெயர நானில மசைக்குங்
காப்புடை வாழ்க்கைக் கலைப்பெரு மாட்டியைச்
செந்தமிழ்ச் செல்வியைத் தேமொழித் தேவியை
சந்தனச் சிலம்பியைத் தாமரை யாட்டியைத்
தென்னவன் பாவையைச் செம்பியன் பூவையை
மன்னவன் சேரன் வரைதரு மயிலை
இன்னுயிர் நாவமர் பொன்னிறக் கிள்ளையை
ஏழிசை நறும்பொழில் கூவுவெண் குயிலை
விண்ணகப் புலவர் வெட்கிவா யூற
மண்ணகப் புலவர் வாரிவாய் மடுக்கும்
அருள்பெற லமுதைப் பெருஞ்சுடர் விளக்கைத்
தன்னருஞ் சேயிற் றமிண்மகாஅர்க் காக்கும்

அன்னையை யன்னவ ளின்னலொ டுறைதருஞ்
சிறுகுடின் மருங்கிற் குறுகுகிர் குறுகிப்
புறமொழி விழைவெனுஞ் செறியிரு ளகன்றன
மறுவறு புலமை வாரண மியம்பும்
தெளிவெனு மாயிர மொளிநிரை பரப்பிப்
புகழெனும் பரிதி கடன்முக டெழுந்தனன்
அடியவ ருள்ளத் தறிவுகண் மலர
வடிவுடை நெடுங்கண் மலர்திறந் தன்னை
தொழுதகு பள்ளி யெழுகென வெழுப்பிச்
செம்பொற் றவிசி னும்பரி னிரீஇ
அன்புநீ ராட்டி வெண்கலை யுடுத்திச்
சைவலப் பூங்குழ லைவகை முடிமின்!
மெய்வகைச் சாந்த விரைக்குழம் பணிந்து
செஞ்சொலிற் றொடுத்த மஞ்சரி வளைமின்!
விதுப்பிறை பழித்த கதிர்ப்புறு நுதலில்
பொங்கிய மகிழ்ச்சிக் குங்கும மிடுமின்!
உய்வகை மும்மையி னுண்மை தெரித்துத்
தெய்வப் புலவன் செய்தருள் மணிமுடி
வணங்காச் சென்னி யிணங்கச் சூட்டி
மென்பணைத் தோளினும் பொன்புனை மார்பினும்
மூவ ராரமும் முனிவர் கோவையுந்
தேவர்மா மணியு மேவர வமைமின்!
அன்பி னைந்திணை ஆழ்வார் திருமொழி
பொன்புனை மாலை வேய்ந்து மின்பொலி
குண்டலம் வளையெனு மொண்டமி ழிரண்டும்
காதினும் போதுறழ் கையினு மிடுமின்!
தனியாப் புலமைத் தண்டமிழ்ச் சாத்தன்
மணிமே கலையை மருங்குறச் சேர்த்திச்
சேரன் றந்த திருக்கிளர் சிலம்பு
வேரியந் தாமரை மெல்லடி புனைமின்!
நாலடிப் பாதுகை கீழுறக் கொழுவி
நாவணி தந்த பாவணி பலவும்

பொருந்துழி பொருந்துழி திருந்துபு பூட்டி
ஒப்பி லுடல்பொரு ளாவியென் றுரைசால்
அப்ப முப்பழ மமுதமு நல்கி
மெய்ப்பொருள் விளக்கங் காட்டி யற்புட
னூழி முதல்வி! வாழிய வென்று
சொல்லான் டியம்பும் பல்லான் டியம்பி
முத்தமிழ் முக்குண மூவுரு வெனாஅ
முத்தொழில் மூவுயிர் மும்மல மெனாஅ
என்று குறித்த முழுவதுங் குறிக்குஞ்
சான்றவ ராய்ந்த தமிழ்மொழி மந்திரம்
நாவியன் மருங்கி னவிலப் பாடி
வலமுறை மும்முறை முறைமுறை வாராக்
கண்ணினீர் வார மெய்ம்மயிர் சிலிர்ப்ப
நெஞ்சநெக் குருக வஞ்சலி செய்து
செந்திரு நாணச் சிதையா வரமருள்
சிந்தா மணியே ! நந்தா விளக்கே !
ஆருயிர் மருந்தே! யடியவர் விருந்தே !
கற்றவர் களிக்க மற்றவர்க் கொளித்த
கற்பகக் கனியே! யற்புதத் தேனே !
அருட்பெருங் கடலே! யிருட்பெருங் கடற்குப்
புணையே! தோன்றாத் துணையே! பிணையே!
கண்ணு நீயே! கருத்து நீயே!
புண்ணிய முதல்வி போற்றியென் றுற்றவும்
அன்புடை நன்மொழி கூறி முன்புநின்
றழுமின்! விழுமின்! எழுமின்! தொழுமின்!
ஆடலு மாடுமின் ! பாடலும் பாடுமின் !
யானறி யளவையி னன்றி நீவிர்
அறிந்தன வறிந்தன புரியின் சிறந்ததன்
மூவா விளநலங் காட்டி வாய்மலர்ந்
தஞ்சலிர் வாழியென் றின்சொற் கூறி
வரம்பல நிரம்பவு மீயும்
அறம்பொரு ளின்பம்வீ டடைந்துவாழ் குவமே!

*உமாபதி சிவாசாரியர் புராணம்

தில்லைப்பதியிலே வாழ்கின்ற திருவுடையந்தணர் மரபினில் உமாபதி சிவாசாரியர் பிறந்து வளர்ந்து, பொன்னம்பலவர்க்குப் பூசனை புரியும் பேறுபெற்றுத் திகழ்ந்தனர். தில்லை மூவாயிரவருள் சிறப்பாக இவர் ஒருவரே சித்தாந்த ஞானத்தை உலகர்க்கு விளக்கினோராவர். * * * * * *

ஸ்ரீ உமாபதி சிவாசாரியர் சிவாகமங்களெல்லாம் இனிது கற்றுத் தவநெறி ஒழுகி இறைவரது ஒப்பற்ற திருவருள் பதிதற்குரிய பருவம் வாய்ந்திருந்தார். அவர் ஒருநாள் கூத்தப் பெருமானுக்கு வழிபாடு முடித்துத் தமது வீட்டிற்கு வழக்கமாக அமைந்த விருதுகளோடு சிவிகைமேற் செல்வாராயினர். அங்ஙனஞ் செல்லுங்கால் வீதியிலே ஒரு திண்ணையில் மறைஞான சம்பந்த சிவாசாரியர் தமது மாணவரோடு வீற்றிருந்தனர். அவர் தமது சீடரை நோக்கி "பட்ட கட்டையிற் பகல் குருடு ஏகுதல் பாரீர்" என்று சொன்னார். இச்சொற்களைக் கேட்ட உமாபதி சிவாசாரியர் சிவிகையினின்று விரைவில் இழிந்து மறைஞான சம்பந்தர் திருவடியைப் பேரன்பொடு தொழுது அவர் சொன்ன வாக்கியத்திற்குப் பொருள் கேட்டார். அவர் அதன் பொருள் தெரித்த பின்பு அவர் திருவடித்தொண்டு பூண்டு உமாபதி சிவம் ஒழுகலாயினர். (பட்டகட்டை என்றது சிவிகை.) பகலினும் உபசார விருதாக விளக்கெடுத்துச் சென்றதன் காரணமாகப் பகற் குருடு என்ற வாக்கிய மெழுந்தது. அதனால் நிலையாமை உணர்த்தியவாறும். ஸ்ரீ உமாபதி சிவாசாரியர் சிவஞானப் பேறொன்றனையே விரும்பிச் சாதி குலம் பிறப்பென்னும் தடஞ்சுழியைக் கடந்து நின்றார். ஒருநாள் சீடருடைய பக்குவ மறிதற்பொருட்டு மறைஞான சம்பந்தர் கைக்கோளர் தெருவிற் சென்று பாவிற் செலுத்திய கூழின் மிச்சத்தை விடாய் தணித்தற் பொருட்டு வாங்கி உண்டார். அப்போது அவர் புறங்கையில் ஒழுகிய மிச்

---

* மெய்கண்ட சாத்திரத்திற்கு, திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை, M.A., M.L., அவர்கள் எழுதிய முன்னுரையினின்றும் எடுக்கப்பட்டது.

சத்தை உமாபதி சிவம் வந்திப் பருகினர். உடனே மறைஞான சம்பந்தர் அவருக்கு ஞானோபதேசஞ் செய்து சிவஞானபோதப் பொருள் உரைத்தனர். இவர் இங்ஙனம் மரபு கடந்து ஞானம் பெற்றதின் சிறப்பை யுணராது ஏனைத் தில்லைவாழந்தணர்கள் இவரைக் குலமுறை பிறழ்ந்தவராகக் கொண்டு நடேசப் பெருமானுக்குப் பூசை செய்யத் தகுதியற்றவரென் றிகழ்ந்தனர். ஆதலினால் அவர் சிதம்பரத்திற்குக் கிழத் திசையிலுள்ள கொற்றவன் குடி யென்னும் ஊருக்குச் சென்று அங்கே மடமொன்று அமைத்து அதில் தமதடியார்சூழச் சிவபெருமானை விதிப்படி வழிபட்டிருந்தார்.

ஸ்ரீ உமாபதி சிவாசாரியர் பொன்னம்பலவருக்குப் பூசை செய்தற்குரிய நாள் வரவும், சிற்சபைக்கு அவரைச் செல்லவொட்டாமல் ஏனையோர் தடுத்துவிட்ட படியால் அவர் தம்முடைய மடமெய்தித் தளர்வுற் றிருந்தார். ஏனைத் தில்லைவாழந்தணர்கள் திருமன்றிற் சென்று அழகிய சிற்றம்பல முடையாரது பேடகத்தைத் திறந்து பார்க்கவும் அங்கே திருவடிவத்தைக் காணாமையால் அச்சமுற்றுப் பெருங் கவலை யுற்றனர். அப்போது யாவரும் கேட்க வானில் ஒலித்த மொழியாவது: "நம்மைப் பூசையாற்றுந் தகுதி யுடையவன் உமாபதி யாதலால் அவன்பா லமர்ந்தோம்" என்பது. இதைக் கேட்டவுடனே யாவரும் ஒருங்கு கூடித் தாயிடஞ் செல்லும் கன்றுகள்போல உமாபதி சிவத்தின் திருமடத்திற்கு ஓடிச்சென்று அவரிடம் தங்கள் குற்றத்தை மன்னிக்க வேண்டுமென்றும் அவர் தில்லைப் பெருமானைப் பூசைசெய்தல் வேண்டுமென்றும் குறையிரந்து நின்றார்கள். அவர் அவ்வாறே அம்பலஞ்சென்று கடவுட் பூசைமுடித்துத் தன் திருமடத்திற்கு மீண்டனர்.

அவர் தமது சிடர் பலருள்ளும் புலையர் குலத்திலுதித்த பெற்றான் சாம்பான் என்பார்க்கு முத்திகொடுத்த வரலாறு மிகவும் அதிசயமானது. பெற்றான் சாம்பான் என்பவர் முற்பிறவியிலேயே பெருந்தவம் ஆற்றியும் சிறிது வழுவினால் தாழ்குலத்துதித்தனர். அவர் நடராஜப் பெருமானிடம் அன்புடையவராய்த் திருக்கோயிலுக்கு விறகு வெட்டிக் கொண்டுவந்து சேர்ப்

பதையே தமது பணிவிடையாகக் கொண்டார். அவருக்குக் கன வில் நடேசப்பெருமான் தோன்றித் தன்பால் பேரன்புடைய உமா பதியாருக்குப் பணிவிடை செய்யும்படி கட்டளையிட்டார். அவர் அவ்வாறே சென்று உமாபதி சிவாசாரிய சுவாமிகளது திருமடத் திற்கு விறகு கொடுத்துவந்தார். ஒருநாள் பெரு மழையினலே அவர் விறகுகொண்டுவரத் தாழ்த்தமையால் மடத்தில் அமுது சமைக்கக் காலந்தாழ்த்தது. அப்போது அதற்குக் காரணமென்ன வென்று சுவாமிகள் தமது மாணவரை வினவச் சாம்பனரது விறகு வராமையால் தடையேற்பட்டது என்று அவர்கள் விடை யளித்தார்கள். மறுநாள் அவர் வந்தவுடன் தனக்குத் தெரிவிக்க வேண்டுமென்று உமாபதிசிவம் அவர்களுக்குக் கட்டளையிட் டார். மறுநாள் சாம்பனர் மடத்திற்கு விறகுகொண்டு வருவதற்கு முன் கடவுள் ஒரு பெரியவர் வடிவம்போல் அவருக்குத் தோன்றி ஒரு சிட்டுக்கொடுத்து அதை உமாபதியாரிடம் அளிக்கும்படி பணித்தனர். மறுநாள் திருமடத்திற்கு இரட்டைப்பங்கு விறகு கொண்டுவந்தவுடன் அங்குள்ள மாணவர்கள் உமாபதி சிவத் திற்கு அவர் வரவை அறிவித்தார்கள். அப்போது உமாபதிசிவம் அவர் யாரென்று வினவ, அவர் பெரியவர் கொடுத்த சிட்டை அவரிடம் கொடுத்தார். அந்தத் திருமுகத்தைப்பார்த்துக் கண் களில் ஒற்றிக்கொண்டு உடம்பெங்கும் புளகங்கொண்டு கூத்தப் பெருமானது திருவருளை வியந்தனர். அந்தச்சிட்டில் எழுதி யிருந்த பாட்டாவது :

> "அடியாற் கெளியன் சிற்றம்பலவன் கொற்றங்
> குடியாற் கெழுதியகைச் சிட்டுப்—படியின்மிசைப்
> பெற்றான் சாம்பனுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
> முத்தி கொடுக்க முறை."

இத்திருப்பாட்டின் கருத்தின்படி பெற்றான் சாம்பனருக்கு ஞானதீக்கை செய்யத் தொடங்கவும் அப்போதே அவர் வீடெய் துதற்குரிய பக்குவமுடையவராக விருந்தமையால் அதற்குத் தக்க முறையாக சுவாமிகள் அருள்செய்தவுடன் அவர் முத்தி யடைந்தார். இதன் உண்மையுணராத சாம்பனரது சுற்றத்தா ரும் மனைவியும் மனங்கலங்கி அரசனிடஞ்சென்று அவரைச்

சுவாமிகள் தீயால் எரித்துவிட்டதாகக் குறைகூறித் துயருழந்தார். அப்போது அரசன் சுவாமிகள்பாற் சென்று அதைப் பற்றி உசாவியபொழுது சுவாமிகள் தீக்கையின் மேன்மையை யெடுத்து விளக்கினார்கள். அரசன் அங்ஙனமாயின் மற்றொரு தீக்கை அவ்வாறு செய்யவேண்டுமென்று வேண்டிக்கொண்டான். அப்போது தமது அடியார் குழாத்தைநோக்கி அவருள் சத்திநிபாதம் பெற்றவரிலராகவே சூழ்ந்து பார்த்துச் சிவபெருமானது திருமஞ்சன நீராலே வளர்ந்ததாய்க் கோமுகையின் பக்கத்தேயிருந்த முள்ளிச்செடியைத் தக்கது என்று கண்டார். தமது அருட்பார்வையால் அம்முள்ளிச்செடியைப் பார்த்தவுடன் அது ஒளிமயமாகி ஒரு பிழம்பாக வானில் எழுந்து மறைந்து சிவனோடு கலந்தது. அப்போது அதனைக்கண்ணுற்ற அரசன் எல்லையில்லாத வியப்பும் மகிழ்ச்சியுமடைந்து சுவாமிகளுடைய திருவடிகளை வணங்கி அவருக்குப் பொன்னுடை மாலை முதலியன கொடுத்துத் தன் பிழை பொறுக்கும்படி வேண்டிக்கொண்டு தன் அரண்மனைக் கேகினன்.

பின்னர் ஒருநாள் சிதம்பரத்தில் திருவிழாவிற்குக் கொடியேற்ற அங்குள்ள அந்தணர்கள் முயன்றபோது கொடியெழாமை கண்டு அவர்கள் கவலையுற்றனர். அப்பொழுது விசும்பில் 'உமாபதி வந்தக்கால் கொடியேறும்' என்ற திருவாக்கு எழுந்தது. உடனே சுவாமிகளிடம் எல்லோரும் போய் வேண்டினர். அவர்களும் அப்படியே விரைவில் தில்லைக்குச் சென்று கோடிக்கவியென்னும் அழகிய சிறுநூலிலுள்ள முதற்பாட்டைப் பாடியவுடன் கொடி தானாக எறிற்று.

சுவாமிகள் சிவப்பிரகாசமென்னும் சிவஞானபோதச் சார்பு நூலொன்றும், உண்மைநெறி விளக்கம், நெஞ்சுவிடுதூது, வினா வெண்பா, திருவருட்பயன், சங்கற்ப நிராகரணம், போற்றிப் பஃறொடை என்னும் பிற எழு சித்தாந்த நூல்களும் இயற்றியருளினார்கள். கோயிற்புராணம், சேக்கிழார்புராணம், திருத்தொண்டர் புராணசாரம், திருப்பதிகக்கோவை முதலியனவும் இவரால் இயற்றப்பட்டன என்ப. வடமொழியில் பௌட்கரம் என்னும் உபாகமத்திற்கு இவர் இயற்றிய விரிவுரை ஒன்றுண்டு. மாண

வர்க்கு ஞானநூல் கற்பித்தலும் பதிநூல் இயற்றுதலும் தக்கவருக்கு முத்திப்பேறு உதவுதலும் ஆகிய பேருபகாரங்களைச் செய்தலையே தமது கடமையாகக் கொண்டிருந்து பின் சமாதி நிலையில் நின்று சித்திரை யத்த நாளில் சிவபெருமானோடு இரண்டறக் கலந்தனர்.

"சத்திய ஞானா னந்த தத்துவ வுருப வத்தாற்
பத்திசெய் யடியார் போற்றப் பரனடிக் கமல மெய்தி
நித்திய சுபாவ முத்த நிராகார பூர்த்தி யான
சுத்தவத் துவிதா னந்த சொரூபமே யாகி நின்றார்."

(உமாபதி சிவாசாரியர் புராணம்.)

தமிழ்த் தோற்றத் தேற்றம்

[திருவனந்தபுரம் T. S. கணேசபிள்ளை]

காப்பு

தமிழ்த்தோற்றத் தேற்றஞ் சமைப்பர்ன் விழுமத்
தமிழ்த்தோற்றத் தேற்றஞ் சமைப்பான் - அமிழ்தார்முக்
கட்கருணைக் கொற்றவன் கடாமூன்றோண் கைம்முகத்தென்
கட்கருணைக் கொற்றவன் கடாம்.

நூல்

ஓரெழுத் தொருமொழி இயல்

நெடில்

ஆ—வினைச்சொல்-ஏவல்-[அ + அ=ஆ] உதா: ஆகுதல்கொள்.

ஆகு. அ-(உத்தேசம்) உள் எண்ணம்-அ-(காரியம்) பயன்பாடாகிய நிறைவேற்றம். உள் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள் என்பதே - ஆ என்பது. இது விடுபாடாகிய வீடுபேறு காரணமாக நிகழும் எண்ணமும், நிறைவேற்றமும் ஆதலின் விட்டியல் எனப்படும். இப்பால் [அ + அஃக= ஆக - ஆகுதலைக்கொள்.] அ-உள் எண்ணம். அஃக - தன்னுட் கொண்டியலும் தொழிற்படுத்திக் கொள்க என்னும்

வியங்கோளே ஏவல் ஆக - ஆ எனப்படுவது, இம்மையிற் படுபாடாகிய பாட்டியல் என்னப்படும். வீட்டியல் மெய்ப் பயன் விளக்கும் - பாட்டியல் உலகத்துள் வாழ்க்கைக்கா வன விளைவிக்கும். அவ்வீட்டியலின் தலைப்பாட்டில், கல்வி கேள்வி ஆராய்ச்சியினுதல், தீமைக்கஞ்சிப் பொல்லாங்கு கனவினும் நினையாது நன்மையி லீடுபட்டு நற்செயலே கொண்டொழுகுவோனுதல், உண்மை நாடுவோனுதல், துன்பமற்ற இன்ப நிலைபெற மெய்ப்பொருள் கண்டுகொள் விருப்பத்தின் இடைவிடாது முயல்வோனுதல் முதலானவை கள் நிகழும். வீட்டியலின் இடைப்பாட்டில், அவ்வவற்குப் பொருத்தமாகக் காணப்படும் மதக்கோட்பாடுகட் கிணங்கக் கடவுள் வழிபாட்டிற்குத் தவிர்வன தவிர்ந்து புரிவன புரிந்து பேறுபெறுவோனுதல் அமையும். வீட்டியலின் கடைப்பாடாகிய மேம்பாட்டில் மக்கட் சுட்டாயது தான் எனக் கண்டமைந்து உயர்வற உயர்நலமுடையோனுதல் நிகழும். பாட்டியலின் தென் பாட்டுள், கண்பார்வைக்குத் தோற்றும் வடிவமுடையனவும், செவிக்குக்கேட்கப்படும் பெயர் புகழ் பண்புடையனவும், நாவிற்குத் தட்டுப்படும் சுவையுடையனவும், தேகத்திற் படவும் கை மெய் தொட வும், கூடியனவும், மூக்கினல் முகந்தறைரும் மணமுடையன வும் மனதிற்குப் புலப்படும் பொருத்த முடையனவு மாகிய பலவற்றையும் பற்றி நாடுவோனுதல் விரும்பிக்கொள்ளவோ வெறுத்துத் தள்ளவோ நினைவோனுதல் நிகழும். பாட்டி யலின் இடைப்பாடாகிய ஆள் வினையினுள் வேட்கையும் அவாவும் எழுந்தோங்கி இழுக்க ஒவ்வோர் எண்ணம் கொண்டு அதனவழி முயன்று வாழ்வோனுதல் நிகழும். பாட்டியலின் படுபாடாகிய வீழ்ச்சியில் ஒவ்வொன்றும் தன் எண்ணம் போல ஒத்து வராமலிருக்கும் குறைபாட்டால் மனக்கவலையும் துன்பமுங்கொண்டு எங்குவோனுதல் அமை யும். இவைகள் வினை முதல் ஆக்கத்தின் அகத்துறுப்புக்கள். பாட்டியலின் எற்பாட்டுள் ஒப்புரவொழுகுவோனுதல், கடம் பாட்டுள் பெற்றோரைப் பேணல், குரவனை வழிபடல், தென்

புலத்தார் தெய்வம் போற்றல் உடையோனுதல் அடங்கும். பிடிபாட்டின் உடம்பாட்டுள் பிறர் வேண்டுகோளுக் கிணங்கி நடப்போனுதல், பிடிபாட்டின் வழிபாட்டுள் நல்லோர் பெரியோர் கற்பித்த வண்ணம் அமைந்தொழுகுவோனுதல் அடங்கும். இவை வினைமுதல் ஆக்கத்தின் புறத்துறுப்புக்கள். இவ்வண்ணம் தன் வினைப்பாடாய்ப் பலவழியினும் பண்படிக் குறிப்பு வினையாலணையும்பெயர், தெரிநிலை வினையாலணையும்பெயர் இவ்விரண்டனுள் ஒன்றை முன்னுக் கேற்று 'நல்லவன் ஆ'கு 'தெரிந்தவனு'கு என இரு சொல் ஒருமொழிப்பட்டு வரும் ஏவல்களாகவும் அந்த அந்த எண்ணத்துக் குரியவைகளை இடமாகக் கொண்டு, இன்பத்திலாகு துன்பத்திலாகு மேலாகு கிழாகு என நிகழும் ஏவல்களாகவும் வழங்கும். (செய்பொருளில்லாதன)

ஆ - வினைமுதல் தொழிற்பெயர் - [அ-உள்வேட்கை + அஃக = தன்னுள் மிடைந்தோங்கும் அவா] ஆய் = இச்சை என இச்சை அமைந்தது. இது பாட்டியலின் இடைப் பாட்டெழுச்சியான தொழிற் பண்பு.

(தொடரும்)

இன்னுரை

[கருந்திட்டைக்குடி வி. சாமிநாத பிள்ளை]

ஒல்லும் வகையா னறவினை ஓவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல். (திருவள்ளுவர்)

Do all the good you can
By all the means you can
In all the ways you can
In all the places you can
At all the times you can
To all the people you can
As long as ever you can
——John Wesley

ஆற்றுமி னும்மா லாம் அறம் எல்லாம்
ஆற்றுமி னும்மா லாம் வகை எல்லாம்
ஆற்றுமி னும்மா லாம் வழி எல்லாம்
ஆற்றுமி னும்மா லாம் இடம் எல்லாம்
ஆற்றுமி னும்மா லாம் போது எல்லாம்
ஆற்றுமி னும்மா லாம் உயிர்க் கெல்லாம்
ஆற்றுமி னும்மா லாம் *கால் அளவே

* கால்:- காலம்.

கடிதப் பாசுரம்

[கருந்திட்டைக்குடி வி. சாமிநாதபிள்ளை]

ஒத வினிய வேதமெனலாம் அருட்பாப் யாடிய இராமலிங் கப் பெருந்தகையார், ஓர் கால் காஞ்சிபுரம் மகாவித்துவான் நமச்சிவாய முதலியாரவர்கள்பால் சென்று கல்விபயில விருப் புற்ற ஓர் நன்மாணவருக்குச் சிபார்சுசெய்து, எழுதியனுப்பிய கடிதப் பாசுரம் வருமாறு:—

திருத்தகுசீர்த் தமிழ்மறையின் முதற்பொருளே தமது திருப்
பெயராக் கொண்டு
பொருத்தமுறு மேகம்பப் புத்தமுதை யுண்டுவக்கும்
புனித னேநின்
உருத்தகுசே வடிக்கடியேன் ஒருகோடி தெண்டனிட்டே
யுரைக்கின் றேனின்
கருத்தறியேன் கவிகொடுநின் பாலன்பால் வருபவரைக்
காக்க வென்றே.

அன்பர்களே! இக்கவியினின்று அருள்வள்ளற் பெரியாரின் உய ரிய பெருந்தகைமை ஊற்றெடுத்துச் சுரப்பது கண்டு சுவைப் பீராகவென இப்பத்திரிகை வாயிலா எழுதலாயினேன்.

மாணவர் பக்கம்

அறிவுதயம்

(திருவருள் விளக்கம்)

[S. A. திருமலைக் கொழுந்துப் பிள்ளை]

முதல் அத்தியாயம்

அறிவு :

உயிர்ப் பொருளறிவு

ஓர் ஆசிரியர் தமது மக்கள் பார்வதியையும் தியாகராஜனையும் அருகிலழைத்து உரையாடு முகத்தால் அவர்கட்கு நல்லறிவு கொளுத்துவா ராயினர்.

ஆசிரியர்:—குழந்தைகாள், நீங்கள் காணும் எப்பொருட் கண்ணும் வெளிப்பட்டோ வெளிப்படாதோ அறிவு உறைகின்ற தென்பதை யறிவீரோ ?

தியாகராஜன்:—எந்தாய், உயிருள்ள எப்பொருட்கண்ணும் அறிவு அமைந்திருப்பதை யுணர்வேன். மரம் கல் மண் முத லான பொருள்களிடம் அறிவு உறைவதை யுணர்கிலேனே.

பார்வதி:—தம்பி, உயிருள்ள எப்பொருட்கண்ணும் அறிவு அமைந்திருப்பதை யறிவேன் என்று கூறி, மரத்தினிடம் அறிவு உறைவதை அறியேன் என்றும் செப்பினை. உன் கருத்தென்ன? மரத்திற்கு உயிருளதோ இல்லையோ, முதற்கண் அதனை யெடுத் துப் பேசு.

ஆசிரியர்:—அம்மா, நீ மிகுந்த புத்தியோடு தம்பிக்குக் கேள்வி போட்டாய். தியாகராஜா, அக்காள் போட்ட கேள்விக்கு தக்க விடை கூறு பார்ப்போம்.

தியாகராஜன்:—மரத்தினிடம் உயிர் இருக்கவே செய்கிறது. நாம் வளர்ந்து பெரிய வுருவங் கொள்வதுபோல் மரமும் முதலிற் செடியாயிருந்து பின்னர் மரமாக வளரும். வெயிலால் வாடி நீரால் செழிப்புடன் தோன்றும். ஆதலின் மரம் உயிருடைய

பொருளே. ஆயினும் அதனிடம் அறிவு உறைவதைத் தெளிகிலேன். மரத்தைக் கல்லோடு சேர்த்து உயிரிலாப் பொருளென நான் கருதியது அறியாமையே. மன்னிக்க வேண்டும்.

ஆசிரியர்:—அம்மா, மரத்தினிடமேனும் செடி கொடிகளிடமேனும் அறிவு உறைவதை நீ கண்டிருப்பையாயின் சொல்லு, பார்ப்போம்.

பார்வதி:—அப்பா, செடி கொடிகள் முதலாய பொருள்களிடத்தே அறிவு இருப்பதை என்னைப்போன்ற குழந்தைகள் யாவரும் கண்டேயிருக்கின்றார்கள். ஆயினும் அவர்கள் அதனை யூன்றிய நோக்கங் கொண்டு அறிவிற் பதித்திலர். தம்பி, ஓர் பீர்க்கஞ் செடி படர்ந்து செல்லும்பொழுது மேற்படர்ந்து செல்ல ஒரு பற்றும் இல்லாதவழி மெல்லிய இளங்கொடிகளைப் (Tendrils) பலவிடத்தும் வீசி, குருடன் கைகளையே கண்களாகக் கொண்டு அருகிருக்கும் பொருள்களை யறிய முயல்வதுபோல் தேட்டங் கொள்வதைப் பார்த்ததில்லையோ!

தம்பி, இவ்வுண்மையை நமக்கு மணிவாசகப் பெருமானார் தமது அருள்வாக்கால் விளக்கியிருப்பதையும் எண்ணிப்பார்.

தியாகராஜன்:—அக்கா, வாதவூரடிகள் எங்ஙனம் விளக்கினார் எடுத்துச் சொல்.

பார்வதி:—* 'கொம்பரில்லாக் கொடிபோல் அலமந்தனன் கோமளமே' எனக்கூறினாரல்லரோ.

ஆசிரியர்:—என் கண்மணி, நினது அறிவையும் சாந்த சீலத்தையும் நோக்கிக் களிப்புறுகின்றேன்.

தியாகராஜன்:—அக்கா, நன்றாய்த் தெரிந்து கொண்டேன். உனக்குக் கோடி வணக்கம்.

பார்வதி:—வணக்கமெல்லாம் எல்லாம் வல்ல இறைவனிடமே செல்க.

தியாகராஜன்:—அக்கா, ஒரு கொடி சுவரிலிருக்கும் புடைக்குட் புகுந்து வெளியேறி விடலாமென நினைத்து உட்புகுந்து பின்னர் அவ்வழி செல்லக்கூடாத போழ்து குருடன் முட்டுப்

---

* திருவாசகம் - நீத்தல் விண்ணப்பம். செ. உ௰.

பட்டுத் திரும்புவதுபோற் றிரும்பாநின்றதையும் பார்த்துளேன். செடிகளின் அறிவு ஓர்விதத் தூக்கங்கொண்ட தெளிவற்ற அறிவாகத் தோன்றுகிறது.

பார்வதி:—கண்டு கொண்டாய், தம்பி.

திருச்சிற்றம்பலம்

[குழந்தைகள் பசும்பொருளாகிய மருந்துச் செடி (Herbs) களிடத்தும் மற்றைப் பிராணிகளிடத்தும் உயிருடன் அறிவு உறைவதைக் கண்டு கொண்டனர். இனிக் கல், மண் முதலாய உயிரிலாப் பொருள்களிடமும் அறிவு உறைவதை ஆசிரியர் தெரிக்கலுற்றார்.]

இரண்டாம் அத்தியாயம்

அறிவு :

உயிரிலாப் பொருளறிவு

ஆசிரியர்:—கண்மணிகாள், நேற்று நீங்கள் இருவிரும் பச்சை நிறங்கொண்ட பச்சிலைகளிடத்தும் இடம் விட்டுப் பெயரும் பிராணிகளிடத்தும் உயிரும் அறிவும் உறைவதைச் சிக்கெனப் பிடித்து மனத்துள் மறவாது கொண்டீர். இனிக் கல், மண் முதலாய உயிரிலாப் பொருள்கள்மாட்டும் அறிவு உறைவதை நீங்கள் காண வேண்டுமே!

குழந்தைகள்:—எந்தையே, தங்களுடைய கேள்வி எமது அறிவை மருட்டப் பார்க்கின்றது. உயிருடைய பொருள்களுக்கு மட்டுமே அறிவு அமைந்திருப்பதாகத் தோன்றுவதன்றி உயிர் பெறாத பொருள்களிடம் அறிவு எங்ஙனம் தோன்றும். ஏதேனுமொரு பொருளிடம் அறிவுதோன்றின் அதற்கு உயிர் இருக்கவே செய்யும்.

ஆசிரியர்:—குழந்தைகாள், நீங்கள் சொல்லும் நியாயம் மிகவும் பொருத்தமானதே. நீங்கள் பேசுவது நீங்கள் நேரிற் கண்ட அநுபவத்தை யொட்டியே. ஆயினும் அரிய இரகசியங்களை யறியப் பேரறிவு வேண்டும். அஃது இன்னதென்பதை விளக்குகிறேன். பேரறிவின் தன்மையை என்சொல்வேன்! அஃது உங்களிடம் விளையுமாயின் காணாத புதுமைகளையும் கேளாத அதிசயங்களையுங் காண்பீர். மரண பயமும் நீங்கும்.

குழந்தைகள்:—எந்தையே, அத்தகைய பேரறிவை எங்கட்கு விளக்கஞ் செய்யவேண்டும். ஓர் பக்கம் அச்சமும் ஓர் பக்கம் ஆசையு மெழாநின்றது.

ஆசிரியர்:—அச்சத்தை யகற்றிச் சிவபெருமான் பக்கல் அன்பை யூன்றிக் கவனத்தோடு நாம் செய்யும் உபதேசத்தை செவிக் கொண்மின். அறிவு இருவகைத்து: எவ்வாறெனின், பேரறிவு சிற்றறிவு என அறிவு இருவகைப்படும். மகான்கள் பேரறிவின் வாயிலாக உலகினர் உணர மாட்டாத அரிய இரகசியங்களை நேரிற் காண்பர்.

நீங்கள் கண்ட அறிவு சிற்றறிவே. எறும்பினிடத்தும், எலியினிடத்தும், பசுவினிடத்தும், யானையினிடத்தும், புலியினிடத்தும், சாதாரண மாந்தரிடத்தும், மற்றுமெல்லாப் பிராணிகளிடத்தும் காணப்படுவது சிற்றறிவே.

குழந்தைகளே, கவனங் கொண்மின். இங்ஙனம் சிதறுண்டு ஒவ்வொரு பிராணியினிடத்தும் தனித்தனி யறிவாய்த் தோன்றும் சிற்றறிவுகள் யனைத்தையும் விளைவித்து அவ்வவ் வறிவுகளைத் தூண்டி நடாத்தும் பேரறி வொன்றுளது. இதுவே ஈசனது அறிவு; இதுவே சிவமெனப் படுவது.

இத்தகைய பேரறிவு உயிருள் பொருளிலும் உயிரில் பொருளிலும் மறைந்துறைகின்றது. இதுபற்றியே நம்மாழ்வாரும் 'உடன்மிசை யுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்' எனப் பேரறிவி னியல்பை விளக்கினர்.

குழந்தைகாள், இத்தகைய பேரறிவே பிரபஞ்ச மனைத்திற்கும் இன்றியமையாப் பற்றுக் கோடாய் நின்று ஜகத்தை நடாத்தா நிற்கும். இதுபற்றியே வேதம்

தெள்ளிய வறிவே முழுமுதல்
(பிரக்ஞானம் பிரஹ்மம்)

எனக்கூறிற்று. மற்றொரு சமயம் இத்தகைய பேரறிவைப்பற்றி விளக்கஞ் செய்வேன்.

குழந்தைகள்:—தங்களது உபதேசம் எங்களைப் பரவசப் படுத்தியது. பரமனுர் கரந்துறைவதை நம்மாழ்வார் சுருக்கமாகவும் விளக்கமாகவும் வெளியிட்ட பெருமை சாலவும் மனத்தை

யுருக்குகின்றது. அதனை மற்றுஞ் சிறிது விளக்கஞ் செய்யின் சாலவும் மகிழ்வோம்.

ஆசிரியர்:—அங்ஙனமே செய்கிறேன். குழந்தைகாள், நமது உடலில் உயிரானது எங்கனும் பரவிநிற்பினும் அவ்வுயிரை வேறு பிரித்து இதுவே யுயிரெனக் காட்டக் கூடுமோ! கூடாதன்றே. ஆயினும், நீங்கள் நான் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருக்கும் போழ்தே ஓர் எறும்பு உங்களைக் காலிற் கடிக்குமாயின் உடனே அதனை எவ்வாறு அறிகின்றீர்கள்? உங்களது உயிர் உடல் எங்கனும் பரவிநிற்பதால் உடலில் எவ்விடத்தேனும் ஒரு பொருள் தட்டநேரின் உங்களது அறிவு உயிரின் வாயிலாகச் சென்று அதனை யறியும். இதுபோலவே பேரறிவு சகல பொருள்களையும் விரவிநின்று தன்னைக் காட்டாது மண்ணாகவும், கல்லாகவும், நீராகவும், காற்றாகவும் வெளியுருவங்காட்டித் தான் எவற்றையு மறிந்து தன்னை யொருவரு மறியா வகையாய் உறையும். இவ்வரிய வுண்மையை மகா சிவயோகியான திருமூலதேவர் எவரும் எளிதே யறிந்து கடைத்தேறும் வண்ணம்

'மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதம்'

எனும் அரிய திருமந்திரத்தால் விளக்கஞ் செய்தார்.

பார்வதி:—எங்கட்குத் தெய்வமாக விளங்கும் எந்தையே, இவ்வரிய மந்திரத்தை எங்களறிவிற் புகும்வண்ணம் துலக்கஞ் செய்யப் பிரார்த்திக்கிறேன்.

தியாகராஜன்:—அண்ணலே, அங்ஙனமே எனக்கும் ஆவல் பெருகிற்று. அருள் செய்க.

ஆசிரியர்:—குழந்தைகாள், நீங்கள் விரும்பிய வண்ணமே தெளிவாக விளக்குகிறேன். கருத்தை யூன்றிச் செவிக் கொண்மின். கைவல்லானாகிய தச்சன் ஓர் மரத்தை யானை யுருவாக அமைத்துள்ளான். கட்டையே யாயினும் அசதியில் நோக்குவார்க்கு அவ்வுருவம் யானைபோல் மருட்டி அச்சத்தைத் தரும். அச்சம்

நீங்கி எம்மரத்தாலாய வுருவென வூன்றி நோக்குமிடத்தில் யானை போனவிடம் தெரியவில்லை. நிற்பது மரமே. அங்ஙனமே இப் பிரபஞ்சத்தை யூன்றிய நோக்கங்கொண்டு பாராமல் மேலாகப் பார்ப்பதால் கல்லெனவும் நீரெனவும் தீயெனவும் காற்றெனவும் பஞ்சபூத மயமாகத் தோன்றும். ஆழ்ந்து நோக்கினுலோ மெய்யா யிருப்பது சத்தே; பிரபஞ்சம் போனவழி தெரியாது மறையும். இந்த சத்தே பேரறிவாய் அருளே மயமாய் நீங்காத ஆனந்த மயமா யிருப்பது. இதுவே திருமூலரது மந்திரத்தின் பொருள்.

குழந்தைகள்:—அப்பனே, பிரபஞ்சத்திற்கு பற்றுக்கோடாய் அதனை ஆண்டு நிற்கும் பேரறிவை யறிந்து கிட்டி அம்மயமாக நாம் நம்மை யாக்கிக் கொள்வ தெங்ஙனம்?

ஆசிரியர்:—பேரறிவாகிய சத்தி னியல்பையும் அதனைக்கண்டு அதனோ டொன்றும் வழியையும் நாளையதினம் உபதேசிப்பாம். போய் வம்மின்.　　　　(தொடரும்)

தமிழ்நீதி

[S. A. திருமலைக் கொழுந்துப் பிள்ளை]

அருளும் அறிவும்

குழந்தைகாள்! உலகத்தில் மிக்க அருமையான பொருள் அருளே. இது பற்றியே அருளெனப் பெயர் கொண்டது. அருள் தான் யாதெனின் தன்னுயிர்போல் ஜீவ பேதங்கள்மேல் வைக்கும் இரக்கமாம். 'கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி, எல்லா வுயிருந் தொழும்' எனத் தெய்வவாக்கனும் கூறினனல் லனே! 'ஆகவே ஜீவகாருண்ணியம் ததும்பியெழும் நெஞ்சத் தவர் கடவுட்டன்மை படைத்தவராவர். பெருங்கருணை வாய்ந்த புத்தமகான் நாற்காற் பிராணிகளை நமது சகோதரராகப் பாவித்து அன்புடன் அவற்றை யாதரிக்கும்படி நன்மதி கூறியிருக்கிறார். நிற்க:

அருளுடையாரை நல்லறிவும் பின்றொடரும். அருளைப் போற்றாது அறிவொன்றையே வளர்ப்பவர், உலகிற்குக் கேடு விளைப்பதில் பிரதம ஸ்தானத்தைக் கொள்வர். நல்லறிவு எல்லா நன்மையையும் பயக்க வல்லதே; அறிவை வளர்ப்பது மிகவும்

நன்றேயாயினும் அருளைக் கைவிட்டு அறிவை மட்டும் பெருக்குவது பெருங்கேடாம். புத்திமான்களா யிருப்பவர் அருளையும் அறிவையும் ஒருங்கே போற்றக்கடவர். இனி உதாரண முகத்தால் அருளைச் சில கதைகளால் விளக்குதும்.

அருள்விளை காதைகள்

அருளால் நிலைபெற்ற தீபஸ்தம்பம்

ஆங்கில நாட்டின் தென்கிழக்கு மூலையில் கடற்கரையோரமாக விருக்கும் ஓர் பாறையில் கடலிற் றிரிதரும் கப்பல்களுக்கு வழிகாட்டியாக அமையுமாறு ஓர் தீபஸ்தம்பத்தைக் கட்டினார்கள். கடவுளாணையால் கரையின்றி யமைந்த சமுத்திரமோ சில மாதங்களில் அதனை யுடைத்தெறிந்தது. மற்றும் ஒன்றைக் கட்டினர். அதனையும் கடற்றகர்த்துத் தள்ளிற்று. இங்ஙனம் ஓர் தம்பமும் நிலையாதிருப்பதைக் கண்ட அருள் வயப்பட்ட ஓர் சிற்பி (An Engineer) ஈசனருளை நெஞ்சத்திருத்தி ஓர் தீபஸ்தம்பத்தைக் கட்டுவித்து அதனடியிற் கீழ்க்கண்ட வேத வசனத்தைக் கல்லிற் பொறித்தார்.

Except the Lord breedeth the house they labour in vain that build it.

[ஈசனே கட்டின் நிலைபெறுவதன்றி மாந்தர் கட்டும் வீடு நிலை பெறுமோ ?]

அதுமுதற்கொண்டு அக் கலங்கரை விளக்கம் நிலைத்து நின்றது.

இதுவே Eddystone Light House.

அருளைக்காட்டிய ஆசிரியர்

ஆங்கில நாட்டில் ஓர் பிரபு தனது குமாரனை எல்லாக் கலைகளும் நிரைந்தவோர் ஆசிரியரிடம் அகலாத அணுக்குத் தொண்டனாக வமையும்படி பணித்தார். அங்ஙனமே சிறுவன் ஆசிரியரைவிட்டுப் பிரியாது கலைகளைப் பயின்று வருநாளில் வழக்கம்போல் இருவரும் ஓர்நாள் உலாத்தச் சென்ற போழ்து ஒருசெடியில் அங்கி தொங்க அதனடியிற் காலிற்கிடும் பூட்ஸ் (boots) இரண்டும் காணப்பட்டன. இவை அயலே வயிலில் வேலைசெய்து

கொண்டிருந்த வோர் கிழவரது உடைமை. இவர் எளியவராத லின் வயிற்றுப்பாட்டிற்காக இவற்றை யிங்ஙனம் களைந்து வைத்து விட்டு புலத்திற் பாடுபட்டுக் கொண்டிருந்தார். சிறுவன் ஓர் விளையாட்டைச் செய்யலாமென வெண்ணி தனது ஆசிரியரிடம் 'நான் இந்த பாதரக்ஷைகளிரண்டையும் ஒளித்து வைத்து விடு கிறேன்; நாமிருவரும் மறைந்திருப்போம். வேலை முடிந்து கிழவர் வந்து திண்டாட்ட முறுவதைக் கண்டு மகிழ்வோ' மென்றனன்.

அப்போழ்து, ஆசிரியர் இளைஞனைப் புன்முறுவலோடு நோக்கிக் 'குழந்தாய், நீ விரும்புவது பாவமற்ற சிறிது ஆனந் தம். நீ கருதும் விளையாட்டால் உனக்குச் சிறிது களிப்பு விளையு மாயினும் ஏழையாகிய கிழவர் மனம் புண்படும். நான் ஓர் சூழ்ச்சி சொல்கிறேன். அங்ஙனம் செய்வையாயின் உனக்கு ஆனந்தம் பிறப்பதுடன் கிழவருக்கும் ஆனந்தம் பிறக்கும்; எனக்கும் பரம சுகத்தை நல்கும்' என்றார். உடனே இளந்தோன்றல் அவரை நோக்கித் 'தாங்கள் கூறும் வண்ணம் செய்ய வோர் தடையு மில்லை; உடனே வெளியிடுக' வெனக் கெஞ்சினன். ஆசிரியர் தனது மாணவனை மிக்க வருளுடன் நோக்கிக் 'குழந்தாய், நீயோ குறைவற்ற செல்வவான்; இவ்வெளிய கிழவரது பாதரக்ஷைகள் இரண்டினுள்ளும் ஒவ்வொன்றிலும் ஒரு சிறிய தங்கக் காசை வைத்துவிட்டு நாமிருவரும் மறைந்திருக்கலாம்; அப்போது நிகழ் வதைக் கண்டு களிப்பாம்' எனக் கூறினர். அங்ஙனமே பிரபுவின் குமாரன் செய்தலும், இருவரும் ஓரிடத்தில் மறைவிருந்தனர். சூரிய பகவானும் அத்தமித்தார்.

இருள் கவியவே புலத்தில் வேலை செய்துகொண்டிருந்த கிழ வர் அதனை விட்டு நீங்கித் தனது குப்பாயமும் பாதரக்ஷைகளும் இருக்குஞ் செடியைக் குறுகி அங்கியை அணிந்து கொண்டபின் பாதரக்ஷைகளைக் காலிற் பூட்டுதற்காக வலதுகாலைத் தமது பாத ரக்ஷைகளிலொன்றிற் புகுத்தவே உள்ளிருந்த பொற்காசு காலில் உறுத்திற்று. உடனே காலை எடுத்துவிட்டு பாதரக்ஷைக்குள் ளிருப்பது யாதெனக் கையிலெடுத்துப் பார்த்தவளவில் சாயங்கால வெளிச்சத்தில் காசு மினுக்கென ஒளிவீசிற்று. கிழவரெவரோ னுக் தமக்கு வம்பு செய்யக் கருதிய சூழ்ச்சியோ வெனச் சுற்றுமுற்

றும் பார்த்தார்; ஒருவரும் தென்படவில்லை. உடனே அவர்பாலெழுந்த வானந்த மேலீட்டை என் சொல்வேன்! மிகக்கொடிய வறுமையால் மொத்துறும் தமக்கு ஈசனே யருள் புரிந்ததாகக் கருதி அக்கிழவர் வானத்தை நோக்கி 'ஈசா இன்று கிடைத்த சொற்ப கூலியைக் கொண்டு எங்ஙனம் வீடு செல்வேன், கடன்காரர்களுக்கு என் சொல்வேன், குழந்தைகளை எங்ஙனம் பசி ஆற்றுவேனென மிக்க துக்கத்திலாழ்ந்து நின்ற எனக்கு இன்று விசாரத்தை யகற்றிய நினதருளிற்கு மிகவும் வந்தனம்' எனக்கூறி இடது காலைத்தமது பாதரக்ஷையிற் புகுத்தவே மற்றுமொரு தங்கக்காசு கிட்டிற்று. இதனைக் காணவே கிழவர் மிகவும் பரவசமுற்று' முழந்தாட்பணியிட்டு 'எங்கும் நிறைந்த பொருளே, எளியனேன்பால் பேரருளைச் சுரந்து விட்டாய் போலும். எனக்கிருக்கும் கடன்கள் யாவும் ஒழியும். சிலநாள் வரை வயிறார ஆகாரமுங் கிடைக்கும். குழந்தைகள் மகிழ்வர், மனைவியும் களிப்படைவள். இங்ஙனம் ஓர் சிறிதும் எதிர்பாராத நன்மையை விளைத்த கருணைத்திறத்திற்கு வணக்கம்' எனப் பன்முறை இருகண்களிலும் ஆனந்த அருவி பொழிய, வணங்கினன். இதனை மறைவிலிருந்து கண்ணுற்ற ஆசிரியரும் மாணவகனும் தாமும் அருள்வயப்பட்டுக் கண்களில் நீர்ததும்பி நின்றனர். அப்போழ்து ஆசான் தமது இளந்தோன்றலை நோக்கி, 'இளையாய், நீ புரிந்த செயல் எத்தகைய இன்பத்தைப் பயந்தது! கிழவரிடமும் நம்மிடமும் எத்தகைய வுயர்ந்த தெய்வசிந்தையை விளைவித்தது! இதுமட்டோ! இக்கிழவர் தமது வீடு சென்றவுடன் தமக்குத் தெய்வம் புரிந்த எவரும் எதிர்பாராத உபகாரத்தை மனைவிக்கும் குழந்தைகளுக்கும் தெரிவிக்கவே அக்குடும்பமுழுதும் எத்தகைய பேரின்ப சுகத்துள் ஆழும்; உனது தந்தையாரிடம் நீ புரிந்த அருட்செயலை யுரைப்பின் அவருக்கு எத்தகைய சுகம் விளையும்! இதுவே அருள் விளையாட்டு' எனக்கூறினர். சிறுவன் தான் பிறந்தது முதற் காணாத பேரின்பத்தைத் தனக்குத் தனது வாத்தியார் விளைவித்த அற்புத உபதேசத்தை என்றும் மறவாத சிந்தையனாய் மேன்மேலும் அறிவிற் பெருக்கமடைந்து அருளையும் வளர்த்து வந்தான்.

Printed by Sivakami Vilasam Press : Published by V. Subbiah
for The S. I. S. S. W. P. Society, Ltd., Madras.

சேக்கிழார் பிள்ளைத்தமிழ்

மூலமும் குறிப்புரையும்

இவ்வுரை இதுவரை வெளிவந்த உரைபோலில்லாமல் மிகவும் தெளிவாக விருக்கும். ஆங்காங்கு காணப்படும் கதைக் குறிப்புக்களும், இந்நூலாசிரியர் எடுத்தாளும் பெரிய புராணச் செய்யுட்களும் எடுத்து விளக்கப்பட்டிருக்கின்றன. மேற்கோள்களெல்லாம் பெரும்பாலும் பெரிய புராணம், தேவார முதலிய சைவ சித்தாந்த நூல்களினின்றும் காட்டப் பெற்றிருக்கின்றன. நல்ல அழகான வழுவழுப்பான கடிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது.

விலை அணா 10

சந்தானாசாரியர் சரித்திரமும்

அவர்களது அருள் நூலும்

சைவ சித்தாந்த விளக்கமும்

இந்நூல் சந்தானாசாரியர்களது சரித்திரத்தையும், அவர்களால் அருளப்பட்ட சித்தாந்த நூல்களினது வரலாற்றையும் பற்றி எழுந்த ஆராய்ச்சியாகும். இது திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை M.A., M.L., அவர்களால் எழுதப்பட்டது. இந்நூலில் சைவ சித்தாந்தத்தை விளக்கப் புகுந்த கட்டுரையொன்றும் சேர்த்திருக்கிறது. நல்ல பதிப்பு.

விலை அணா 8

அறிவு விளக்க வாசகம்

இஃது ஓர் அழகிய உரை நடை நூலாகும். உலகத்தைப்பற்றியும் அதில் நடைபெறும் பொருள்களைப்பற்றியும் இன்னதென்றறியாதிருக்கும் ஒவ்வொருவருக்கும் அவ்வறிவை விளக்க வந்த வசன நூலாதலால் இஃது அறிவு விளக்க வாசகம் என்னும் பெயருடைத்து. இது மாணவர்க்குப் பெரிதும் பயன் விளைக்கத்தக்க நூலாகும்.

விலை அணா 5

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்.

306, லிங்க செட்டி தெரு, சென்னை.

குமர குருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு

இதன்கண் அடங்கியவை

௧. திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா
௨. மீனாட்சியம்மைபிள்ளைத்தமிழ்
௩. மீனாட்சியம்மை குறம்
௪. மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை
௫. மதுரைக் கலம்பகம்
௬. நீதிநெறி விளக்கம்
௭. திருவாரூர் நான்மணிமாலை
௮. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்
௯. சிதம்பர மும்மணிக் கோவை
௰. சிதம்பரச் செய்யுட் கோவை
௧௧. சிவகாமியம்மை இரட்டைமணிமாலை
௧௨. பண்டாரமும்மணிக்கோவை
௧௩. காசிக் கலம்பகம்
௧௪. சகல கலாவல்லி மாலை என்னும் சரசுவதி தோத்திரம்
௧௫. கைலைக் கலம்பகச் செய்யுட்கள்

அரும்பொருள் விளக்கம்.—நூல்வரிசையாக அருஞ் சொற்களுக்குப் பொருள் எழுதியும், செய்யுட்களில் செறிந்து கிடக்கும் அரிய கருத்துக்களை விளக்கியும் இஃது எழுதப் பெற்றுள்ளது. இப்பிரபந்தம் கற்கப் புகுவார்க்கு ஆசிரியர்போல உற்ற துணையாக இனிதமையு மென்பதிற் றடையில்லை.

நூற்சிறப்பு.—இந்நூலாசிரியர் ஐந்தாண்டு வரையும் ஊமையாயிருந்து திருச்செந்தூர் முருகப்பெருமான் திருவருளால் ஊமை நீங்கப்பெற்று உடனே 'கந்தர் கலிவெண்பா' பாடியதும், பின் வடக்கு நோக்கிப் பல திருப்பதிகளுக்குஞ் சென்று பற்பல அற்புதங்களைச் செய்து பல நூல்க ளருளியதும் இப்பிரபந்தம் அருட் பிரபந்தமா மென்பதை நன்கு விளக்கும்.

இது சிறந்த இலக்கியமாய்ச் சங்கநூற் பிரயோகம் நிரம்பியதாய் விளங்குவதோடு நீதியும், உலகவொழுக்கும், சைவ சித்தாந்தக் கருத்துக்களுஞ் செறிந்து சொல்வளம் பொருள்வளம் மிக்குடையது. ஆகலான் இலக்கியமுஞ் சாத்திரமுங் கற்கப் புகுவார்க்கு முதற்கண் இப்பிரபந்தத்திலுள்ள சிற்சில நூல்களை ஆசிரியர் பாடஞ் சொல்லி வைப்பது வழக்கமாக இருந்து வருகின்றது.

பதிப்புச்சிறப்பு.—முற்பதிப்புக்களில் காணப்பெறாத இதன்கண், ஆசிரியர் திருவுருவப்படம், அரிய பாடபேதங்கள், ஆசிரியரருளிய கைலைக் கலம்பகச் செய்யுட்கள், பாட்டு முதற் குறிப்பகராதி, அருஞ் சொற்பொருள் விளக்கம் முதலியன சேர்க்கப் பெற்றுள்ளன. ஒவ்வொரு நூலுக்கும் தனித்தனி முகப்புக் கொடுக்கப் பெற்றிருக்கின்றது. பொன் கிலிட்டுடன் கண்கவர் வனப்பு மிக்க கட்டட முடையது.

இதன் விலை ரூ. 3 8

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
306, லிங்கசெட்டித் தெரு, சென்னை.